கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
28-3-1976
60 காசு





பெரும்பாலான குழந்தைகள்
எதையும் செய்யும்
ரெக்ஸ் ஜெல்லி தந்தால்!
தங்கையின் பின்னலைப் பிடித்து இழுக்க மாட்டேன், நீங்கள் எனக்கு ராஸ்பெர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
என் பொம்மையை உமாவுக்கு விளையாடத் தருவேன், அவள் எனக்கு ஸ்ட்ராபெர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
நான் வீட்டுக் கணக்குப் போடுவேன், செர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
OBM-5472 TH
REX
JELLY CRYSTALS
RASPBERRY
தயாரிப்பது எளிது. தேவையில்லை பாலும் சர்க்கரையும்.
500 மி.லி. (½ லிட்டர்) நீரைக் கொதிக்க விடுங்கள். அதில் ஒரு பேக்கெட் ரெக்ஸ் ஜெல்லி படிகங்களைப் போட்டுக் கிளறுங்கள். பாலும் சர்க்கரையும் தேவையில்லை. குளிர விடுங்கள். பின்னர் அதை ரெஃப்ரிஜிரேட்டரிலோ அல்லது பனிக்கட்டியிலோ வைத்துப் படிய விடுங்கள். நன்றாகப் படிந்ததும், எடுத்துப் பரிமாறுங்கள், அப்படியே அல்லது பழம், கஸ்டர்டு, கேக்,
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப்பட்டதால், ஜெல்லி படிகங்களிலேயே மிகச் சிறந்தவை ரெக்ஸ் ஜெல்லி படிகங்கள். ஒரு பேக்கெட் வீட்டில் இருக்கட்டும்... எப்போதுமே!
ரெக்ஸ்
ஜெல்லி படிகங்கள்
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். ஸோமானி மார்க், பம்பாய் 400 001.

கோகுலம்

மலர் 4 ❋ இதழ் 26

மார்ச் 28, 1976

ராட்சஸ, பங்குனி, 15

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

சந்தா விகிதம்

இந்தியா

ஒரு வருடம் ரூ. 15.00
ஆறு மாதம் ரூ. 7.50

வெளிநாடுகள்

ஒரு வருடம் ரூ. 40.00
ஆறு மாதம் ரூ. 20.00


ஒரு வேடிக்கை!

ஒரு பெரிய கைக்குட்டையை மேஜை மீது விரியுங்கள். உங்கள் நண்பர்களைப் பார்த்து ''இந்தக் கைக்குட்டையின் ஒரு முனையை ஒரு கையிலும் மறு முனையை மறு கையிலும் பிடித்துக் கொண்டு, இதில் ஒரு முடிச்சுப் போட வேண்டும்'' என்று கூறுங்கள். உடனே அவர்கள் ''பூ! இதென்ன பிரமாதம், இதோ'' என்று முடிச்சுப் போட முன்வருவார்கள். அப்போது நீங்கள் இப்படி ஒரு நிபந்தனை போட வேண்டும்.

''ஆனால் முடிச்சுப் போடும்போது, நீங்கள் பிடித்துள்ள இரு முனைகளின் பிடியையும் விடக் கூடாது.'' கொஞ்சம் யோசனையுடன் முயன்று பார்ப்பார்கள். ஆனால் யாராலும் அப்படி முடிச்சுப் போட முடியாது. உடனே நீங்கள் அதை நிகழ்த்திக் காட்டலாம்.

எப்படி?


உங்கள் கைகளைக் கட்டிக் கொள்ளுங்கள். (படம்) அதே நிலையில் குனிந்து ஒரு கையினால் கைக்குட்டையின் ஒரு முனையினையும் மறு கையினால் அதன் எதிர் முனையையும் பற்றிக் கொள்ளுங்கள். இனி கட்டிக்கொண்டுள்ள கைகளை விடுவித்துக் கொள்ளுங்கள்—கைக்குட்டை முனைகளின் பிடியை விடாமலேயே. உங்கள் கைகள் விடுபடும் போது கைக்குட்டைகளில் தானாகவே முடிச்சு விழுந்திருக்கும்! என்ன வியப்பாக இருக்கிறதா? முடிச்சுப் போட்டுத்தான் பாருங்களேன். ❋




ஒரு விளையாட்டு!

ஒரு பெரிய காகிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஒன்றிலிருந்து பதினைந்துவரை எண்களை உங்கள் இஷ்டப்படி 'மானுவாரி'யாக எழுதுங்கள். **அதே மாதிரி** இன்னொரு செட் எண்களை ஒன்றிலிருந்து பதினைந்து வரை அதே காகிதத்தில் உங்கள் இஷ்டப்படி இங்கும் அங்குமாக எழுதுங்கள். ஒரே ஜாதி எண்கள் அருகருகே இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அதாவது ஓர் எட்டின் அருகே மற்றோர் எட்டு இருக்கக் கூடாது. இப்போது காகிதத்தில் இரண்டு ஒன்றுகள், இரண்டு இரண்டுகள், இரண்டு மூன்றுகள் என்று பதினைந்து வரை இரண்டிரண்டு எண்கள் இருக்கும் இல்லையா? இனி மேல்தான் விளையாட்டு.

இதை இரண்டு பேர் விளையாடலாம். ஒருவரிடம் நீல வண்ண பால் பாயிண்ட் பேனவும் மற்றவரிடம் சிவப்பு வண்ணப் பால் பாயிண்ட் பேனவும் இருக்கட்டும். ஒரு ஸ்கேலும் வைத்துக் கொள்வது நல்லது. ஒருவர் மாற்றி ஒருவராக ஆட வேண்டும். எப்படி? ஒரே இனமுள்ள எண்களை நேர் கோடுகளால் இணைக்க வேண்டும் (படம்) — ஒன்றிலிருந்து ஆரம்பித்து. ஆரம்பத்தில் சுலபமாக இருக்கும். ஆனால் நாலைந்து ஜோடிகளைச் சேர்த்த பிறகுதான் இதில் உள்ள கஷ்டம் தெரியும். கோட்டின் மீது கோடு வெட்டிச் செல்லக் கூடாது என்பது நிபந்தனை. ஆகவே எந்த ஓர் ஆட்டக்காரருக்கு இந்த நிபந்தனைப்படி ஜோடி சேர்க்க முடியாத நிலை ஏற்படுகிறதோ அவர் தோற்றவராகிறார். ❋





அற நெறி

திருமுருக கிருபானந்தவாரியார்

உபமன்யு

அயோத தௌமியர் என்ற ஒரு பெரியார் கங்கா நதி தீரத்தில் ஒரு குருகுலம் வைத்து நடத்திக் கொண்டிருந்தார். மாணவர்களைத் தனது குமாரர்களைப்போல் அன்பு காட்டி இன்பமுடன் கல்வி பயிற்றுவித்தார்.

உபமன்யு என்ற ஓர் அந்தணச் சிறுவன் அக் குருகுலத்தில் முதன்மையாக இருந்து கலை பயின்று வந்தான். உபமன்யு என்பவன் வியாக்ரபாதர் என்பவருடைய மைந்தன்.

ஒரு நாள் குருநாதர் உபமன்யுவைப் பார்த்து, ''அன்புள்ள மாணவனே! குருகுலத்துக்குச் சொந்தமான பசுக் குலங்களைக் கானகத்தில் கொண்டு போய்ப் பகல் முழுவதும் மேய்த்து வருவாயாக'' என்று ஆணையிட்டார்.

பிராமணச் சிறுவனாகிய நான் மாடு மேய்ப்பதா என்று சொன்னானில்லை. அவன் குருவார்த்தைக்கு மறு வார்த்தை கூறாது பசுக் குலங்களை ஓட்டிக்கொண்டு காட்டுக்குச் சென்றான்.

பசுக்களைப் புல் தரையில் மேய விட்டும், தண்ணீரில் குளிப்பாட்டியும், நிழலில் இளைப்பாற விட்டும், இனவு நீரச் சொரிந்து விட்டும் அவைகளுடன் மாலை ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தான்.

குருநாதர் இரவிலே மாணவர்களுக்கு வேதம், உபநிஷதம், சாத்திரம், தோத்திரம் முதலியவைகளை அன்போடு போதிப்பார். பாடம் முடிந்தவுடன் எல்லாப் பிள்ளைகளும் உணவுச் சாலைக்குள் சென்று உணவை உண்டு வந்தார்கள். சமையல்காரன் உபமன்யுக்கு உணவு தரவில்லை. உபமன்யு, ''ஐயா! எனக்குப் பசிக்கிறது. உணவு கொடுங்கள்'' என்று கேட்டான். சமையல்காரன், ''உனக்கு உணவு கொடுக்குமாறு குருநாதருடைய கட்டளை இல்லை'' எனக் கூறி மறுத்து விட்டான். உபமன்யு முகம் வாடாமல் பட்டினியுடன் படுத்துறங்கினான்.

இப்படி ஒரு வாரம் கழிந்தது. குருநாதர் அவனை உற்றுப் பார்த்தார். அவன் உடம்பு வாடவில்லை. கொழு கொழு வென்று இருந்தான். உடம்பு அன்னமய கோசம். உணவு இன்றி இவன் வாடாமல் வருந்தாமல் இருப்பதற்கு என்ன காரணம் எனச் சிந்தித்தார்.

''அப்பா! உபமன்யு! உனக்கு குருகுலத்தில் உணவு தருவதில்லை. உன் உடம்பு இளைக்கா திருக்கிறதே, காரணம் யாது?'' எனக் கேட்டார்.

''சுவாமி! அடியேன் கிராமத்தில் சென்று பிட்சை எடுத்துக் கொள்ளுகிறேன்.

கற்கை நன்றே! கற்கை நன்றே!
பிச்சை புகினும் கற்கை நன்றே!

என்பது ஆன்றோர் வாக்கு. அதனால் நான் பிட்சை எடுத்து உண்கிறேன்'' என்றான் உபமன்யு.

''அப்பா! உன்னை நான் பிட்சையெடுக்குமாறு கூறினேனா?''

''சுவாமி! பிட்சை எடுக்க வேண்டாம் என்று கூறினீர்களா?''

''சரி. இனி பிட்சை எடுத்து வரும் அன்னத்தை என்பால் வைத்துவிட்டுப் போ'' என்று கட்டளையிட்டார்.

அப்போதும் உபமன்யு குருநாதன் மீது வெறுப்படையாமல் முகம் வாடாமல் பிட்சை எடுத்து வரும் அன்னத்தை ஆச்சாரியரிடம் வைத்து விட்டுப் போவான்.

இவ்வாறு ஒரு வாரம் கழிந்தது. உபமன்யுவின் உடம்பு இளைக்காமல் இருப்பதைக் கண்டு குருநாதர் அதிசயித்தார்.

''உபமன்யு! பிட்சான்னத்தை என்னிடம் வைத்து விடுகிருய். இருந்தும் உன் உடம்பு இளைக்கவில்லையே காரணம் என்ன?'' என்று கேட்டார்.

'' சுவாமி! அடியேன் இரண்டாம் முறை பிட்சை எடுத்துக் கொள்கிறேன்'' என்ருன்.

''பேஷ்! நீயே திரும்பத் திரும்பப் பிட்சை எடுத்தால் மற்றவர்களுக்கு அது இடையூருகும். இனி இரண்டாம் முறை பிட்சை எடுக்காதே'' என்று கட்டளையிட்டார் குருநாதர்.

ஒரு வாரம் கழிந்தது. அவன் உடம்பு இளைக்காததைக் கண்டு ''இப்போது நீ என்ன செய்கிருய்?'' என்று கேட்டார் குருநாதர்.


''சுவாமி! கன்றுகள் பால் குடித்த பின் கருணையுள்ள பசுக்களின் மடியில் பால் பெருகி வழிகிறது. அதனைக் கை ஏந்திக் குடிக்கிறேன்'' என்ருன்.

குருநாதர், ''பால் கீழே போனாலும் போகட்டும். அதைக் குடிக்காதே'' என்று வன்மையாகக் கூறினர். அதைக் கேட்டும் உபமன்யு குருவை வெறுத்தான் இல்லை.

முன்னையிலும் பன்மடங்கு குருவிடம் அன்பு கொண்டான். ஒரு வாரம் கழிந்தது. ''உபமன்யு நீ பாலை உண்பதில்லை. உடம்பு இளைக்காமைக்குக் காரணம் என்ன?'' என்று கேட்டார்.

உபமன்யு, ''குருநாதா! கன்றுகள் பால் குடித்த பின் அவைகளின் கடை வாயில் வழியும் நுரைகளை உண்டு பசியாறுகிறேன்'' என்ருன். அவர் புன்னகை செய்து ''இனி அதையும் உண்ணுதே. வேறு உணவுப் பொருள் எதையுமே உண்ணுதே'' என்ருர்.

உபமன்யு அன்று பகல் முழுவதும் பசுவை மேய்த்து இரவில் பாடம் கேட்டுப் பட்டினி இருந்தான். மூன்று நாள் பட்டினி கிடந்து, அவனுடைய உடல், உள்ளம், உணர்வு, நாடி, நரம்புகள் எல்லாம் சோர்ந்து விட்டன. பசி தாங்க மாட்டாமல் 'உணவுப் பொரு



ளைத்தானே குருநாதர்' உண்ணக் கூடா தென்று சொன்னார் என்று எண்ணி எருக்கம்பாலைக் குடித்து விட்டான்.

அதனால் அவன் கண் குருடாகிவிட்டது. வழியும் குழியும் தெரியாமல் பசுக்களை ஓட்டிக் கொண்டு ஆசிரமத்தை நோக்கி நடந்தான். வழியில் ஒரு கிணற்றில் வீழ்ந்து விட்டான். அப்போதும், ''குருநாதா!'' என்றே வீழ்ந்தான். கிணற்றில் தத்தளித்து அங்கு முளைத்திருக்கின்ற ஓர் அரசங் கன்றைப் பிடித்துக் கொண்டு ''குருநாதா, குருநாதா!'' என்று ஜபித்துக் கொண்டிருந்தான்.

இரவில் மாணவர்களுக்குப் பாடம் சொல்கின்ற அயோத தௌமியர், ''மாணவர்களே! உபமன்யு எங்கே?'' என்று கேட்டார். மாணவர்கள் ''குருநாதா! அவன் உணவும் உணர்வும் இன்றி இளைத்து விட்டான். காலையிலே மாடு மேய்க்கச் சென்றவன் வீடு திரும்பினனில்லை'' என்று கூறினார்கள்.

குருநாதர், தீவட்டியை ஏந்திக் கொண்டு ''உபமன்யு! உபமன்யு!'' என்று காடெல்லாம் தேடினார். ''சுவாமி! அடியேன் கிணற்றில் இருக்கிறேன்!'' என்று உபமன்யு கூறினான்.

''அப்பா! நீ ஏன் கிணற்றில் வீழ்ந்தாய்?'' என்று கேட்டார்.

''குருநாதா! தாங்க முடியாத பசியால் எருக்கம்பாலைக் குடித்துக் கண்கள் குருடாகி இக் கிணற்றில் விழுந்து விட்டேன்'' என்று தழுதழுத்த குரலில் கூறினான்.

குருநாதர் தேவ வைத்தியர்களாகிய அசுவினி தேவர்களின் மந்திரத்தை உபதேசித்து, ''இதனை நீ உச்சரித்தால் அசுவினி தேவர்கள் உனக்குக் கண் தருவார்கள்'' எனக் கூறிவிட்டு ஆசிரமத்துக்குச் சென்றார்.

உபமன்யு ஒருமைப்பட்ட மனத்துடன் அம்மந்திரத்தை ஜெபித்தான். அசுவினி தேவர்கள் அங்கு வந்து அவனைக் கரையேற்றினார்கள். தங்கத் தட்டில் உணவுப் பொருள்களை வைத்து ''இதனை நீ உண்பாய்; கண்ணொளி பெறுவாய்'' என்றார்கள்.

உபமன்யு ''குருவின் உத்தரவின்றி உண்ண மாட்டேன்'' என்று மறுத்து விட்டான். அசுவினி தேவர்கள் அவனுடைய உறுதியான குரு பக்தியைக் கண்டு வியந்தார்கள். தெய்வ மருந்தை அவன் கண்களில் பிழிந்தார்கள். பொன் போன்ற கண்களை அவன் பெற்றான். குருநாதரை வந்து தொழுதான். அவர் அவனைத் தழுவி, ''தெய்வத் தன்மை பொருந்திய கண்களுக்கு முன்னே; நடந்த வரலாறுகளும், நடக்கின்ற வரலாறுகளும், இனி நடக்க இருக்கின்ற வரலாறுகளும் பிரத்தியட்சமாகத் தெரியும். இந்த அருட் கண்ணால் பார்த்து அடியார்களின் வரலாற்றை மாணவர்களுக்கு உபதேசித்து உலகத்தை உய்விப்பாயாக'' என்று ஆசி கூறினார்.

இந்த உபமன்யு முனிவர்தான் பெரிய புராணத்தில் வரும் அடியார்களின் வரலாற்றை அருந்தவ முனிவர்களுக்கு உபதேசித்தார்.

தபால் பெட்டி

☐ 29—2—76ல் வெளியான 'மூளைக்கு வேலை' முத்தான ஒன்று. கவிதைகளில் இன்னும் எளிமை இருக்கலாம்.

சீர்காழி — ஏ. வி. குமார்

☐ புத்தம் புதிய பகுதிகள் கோகுலத்தில் தொடங்க இருப்பதை அறிந்து மகிழ்கிறேன். ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கவிருக்கும் கோகுலத்துக்கு எங்கள் அன்பான ஆதரவு என்றும் உண்டு.

குமாரபுரம் — மா. சுப்பாராஜ்

அன்புள்ள ஆசிரியருக்கு,

☐ நீங்கள் கோகுலத்தை வார இதழாக மாற்றுவீர்கள் என எண்ணிச் சந்தோஷம் அடைந்திருந்தோம். ஆனால் உங்கள் அறிவிப்பைக் கண்டதும் மிகவும் ஏமாற்றம் அடைந்தோம்.

கும்பகோணம் — ஹரிஹரன்

☐ கடந்த நான்கு ஆண்டுகள் அமைதியான முறையில் 'கோகுலம்' செய்துள்ள சாதனை நீண்ட பட்டியலில் இடம் பெறக் கூடியவை.

கோகுலம் குழந்தைகள் விரும்பும் சிறந்த புத்தகம்தான். இருப்பினும் பெரியோர்களும் அதில் ஈடுபாடு கொண்டுள்ளதை நான் அறிவேன். எனக்குத் தெரிந்த கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் தொடர்ந்து கோகுலம் வாங்கிப் படித்து அதைச் சேர்த்தும் வைத்து வருகிறார்.

புதுவை — ஞா. ஜெயசீலன்

எது பெருமை?

நிலவுக்குப் பெருமை இரவாலே — குளிர்
நிழலுக்குப் பெருமை வெயிலாலே
மலருக்குப் பெருமை மணத்தாலே — வாழும்
மனிதற்குப் பெருமை குணத்தாலே !

குயிலுக்குப் பெருமை குரலாலே — திருக்
குறளுக்குப் பெருமை கருத்தாலே
மயிலுக்குப் பெருமை அழகாலே — வாழும்
மனிதற்குப் பெருமை அறிவாலே !

பண்ணுக்குப் பெருமை மொழியாலே — நல்ல
பசுவுக்குப் பெருமை பாலாலே
மண்ணுக்குப் பெருமை விளைவாலே — வாழும்
மனிதற்குப் பெருமை செயலாலே !

அருவிக்குப் பெருமை நீராலே — பெரும்
ஆற்றுக்குப் பெருமை ஊற்றாலே
மரத்துக்குப் பெருமை கனியாலே — வாழும்
மனிதற்குப் பெருமை கனிவாலே !

தேனுக்குப் பெருமை பயனாலே — எரி
தீயுக்குப் பெருமை உணர்வாலே
வானுக்குப் பெருமை மழையாலே — வாழும்
மனிதற்குப் பெருமை கொடையாலே !

—மருதங்குடி வெங்கடேசன்



பல்லு போச்சு — 'பாங்கு' வந்தது

'அம்மா அம்மா காசுகொடு
அழகு மிட்டாய் வாங்கிடவே'
சும்மா சும்மா கேட்டானே
செல்லப் பிள்ளை ஆதலினால்.

சும்மா சும்மா கேட்டாலும்
சொந்தப் பிள்ளை ஆதலினால்
அம்மா தினமும் கொடுத்தாளே
ஆசை மகனைத் திருத்தாமல்.

இனிப்பும் ஒருநாள் புளிப்பாச்சு !
இன்னும் சிலநாள் வலியாச்சு !
தனிப்பல் டாக்டர் ஒருவரிடம்
தாயும் மகனும் போனார்கள்

சொத்தைப் பல்லின் பக்கத்தில்
சுருக்கென ஊசி போட்டாரே !
சத்தம் போட்டு அழுதிட்டான்
தாயும் கலங்கி நின்றாளே !

பெத்த வயிறு எரிந்திடவே
பல்லைப் பிடுங்கி எறிந்திட்டார் !
சுத்தம் செய்து மருந்திட்டார்,
சொல்லிக் கொண்டு வந்தார்கள்

முன்போல் 'அம்மா காசெ'ன்பான்
முகத்தைச் சற்றும் சுளிக்காமல்
அன்பால் அம்மா தருகின்றாள்
அவனும் தினமும் பெறுகின்றான்.

அஞ்சல் நிலையச் சேமிப்பில்
அவனும் போட்டு வைக்கின்றான் !
கொஞ்சம் கொஞ்சம் என்றாலும்
கோபுரமாக வளர்கிறதே ! — துறவி

கொடுத்து வைத்தவன்

விமலா ரகுநாதன்



வீட்டில் ஒரே கொண்டாட்டம். உள்ளே அம்மா அடுப்படியில் பிரமாதமாக ஏதேதோ தயாரித்துக் கொண்டிருந்தாள். வறுத்த முந்திரிப் பருப்பின் மணமும், நெய், சர்க்கரைப் பாகின் மணமும் மாறி மாறி மூக்கைத் துளைத்தன. கமலி, ரவி, பாபு அனைவரும் குளித்து அழகாக 'டிரஸ்' செய்து கொண்டு வாசலில் அலங்காரப் பொம்மைகள் போல் நின்றனர். நான் மட்டும் வாசலில் முன்னே இருந்த அறையில் கட்டிலில் படுத்திருந்தேன். நான் தான் எதற்கும் கொடுத்து வைக்காதவனாயிற்றே! நடு அறையில் சுவர்க் கடிகாரம் ஒரு முறை அடித்துவிட்டு ஓய்ந்தது. இன்னும் அண்ணா வரவில்லை. அவன் வரவுக்காகத்தான் இவ்வளவு அமர்க்களமும்!

திருச்சியில் வேலையாய் இருக்கும் அவன் இவ்விதம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை விஜயம் செய்வான். ஆனால் இம்முறை அவன் திடீரென்று ஒன்றரை மாதங்களிலேயே வருகிறான். போன முறை அவன் இங்கு வந்து போகும் போதுகூட நான் கமலி போல், ரவி போல், பாபு போல் வாசலில் அவனுக்காகக் காத்திருந்தேன். ஆனால் இன்றோ?

அம்மா பரபரப்புடன் உள்ளே எட்டிப் பார்த்தாள். ''ஜெய்கா! வேறு 'டிராயர்' சொக்காய் போட்டுக் கொள்கிறாயா? இரு, கை வேலைகளை முடித்து விட்டு வருகிறேன்.''

என் பதிலை எதிர்பார்க்காமலே, அவள் அதே வேகத்தில் உள்ளே சென்றாள். என் வாய் வலி தாளாமல் முனகியது.

அம்மா மீண்டும் உள்ளே நுழைந்தாள். அவள் கரங்களில் நீல வர்ண 'ஷார்ட்ஸும்' ரோஜா நிற 'ஸ்லாக்'கும் மின்னின. யாருக்கு வேண்டும் இதெல்லாம்? ''அம்மா! எனக்கு எதற்கு அம்மா இதெல்லாம்? ....''

''அசடு! உன் அண்ணா வரப் போகிறான். ஜம்மென்று டிரஸ் செய்து கொள்ள வேண்டாமா?'' அம்மா கொஞ்சினாள்.

அம்மா என்னை 'தாஜா' செய்கிறாள் என்று தோன்றியது. நான் வேண்டும் என்றே முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டேன். அம்மா தன் விருப்பப்படியே அவள் கொண்டு வந்த 'டிரஸ்ஸை' அணிவித்துவிட்டு, உள்ளே சென்று விட்டாள்.

மறுபடியும் தனிமை! ஆனால் இது வெகுநேரம் நீடிக்கவில்லை.

வாசலில் 'டாக்ஸி' வந்து நிற்கும் சப்தம் கேட்டது. ''அண்ணா வந்துவிட்டான்'' என்று ஒரே கூச்சல். அண்ணா கலகலப்புடன் உள்ளே நுழைந்தான்.

''என்னடா, ரவி பாபு! எப்படிப் படிக்கிறீர்கள்! என்ன கமலி, வாய் தவளை மாதிரி ஆகிவிட்டதே? எப்போது 'லீவு' உங்களுக்கெல்லாம்?'' அனைவரையும் விசாரித்துக் கொண்டு உள்ளே நுழைந்தவன், என்னைப் பற்றி ஒரு வார்த்தை... ஒரே ஒரு வார்த்தை! மூச்! என் மனம் ஆத்திரத்தாலும், அழுகையாலும், கசப்பினாலும் நிலை தடுமாறியது. 'என் உயிர் எப்போதோ போயிருக்க வேண்டும்!'

உள்ளே அனைவரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அண்ணா, தன் பெரிய பெட்டியைத் திறக்கும் ஓசை கேட்டது. தன் அருமைத் தங்கை தம்பிகளுக்கு வாங்கி வந்திருந்த பொருள்களை வரிசையாய் ஒவ்வொருவருக்கும் அளித்துக் கொண்டிருப்பான்.


''முதலில் கேக் பெட்டியைத் திற அம்மா! எல்லோரும் சாப்பிடலாம்.'' கமலிதான் கூறினாள்.

'இப்பொழுது என் நினைவு ஒருவருக்கும் வராது, எனக்குத் தெரியும்' என் மனம் என்னையே வெறுத்தது.

என் அறையின் வாசலில் நிழலாடியது. நான் அசிரத்தையாக வாயிலை நோக்கினேன். கமலி கையில் கேக்குடன் நின்று கொண்டிருந்தாள். நான் முகத்தைச் சுளித்தேன்.

''ஜெய்கர்! இந்தா....'' அவள் அன்புடன் பேசுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் நானா ஏமாறுபவன் ?

''எல்லாம் நீங்களும் அண்ணாவுமே முழுங்கிக் கொள்ளுங்கள் ! எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை.....'' நான் ஆத்திரத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். சில விநாடிகள் கழித்து, மெல்லத் தலையைத் திருப்பினேன். கமலி, இன்னும் அங்கேயே நின்று கொண்டிருந்தவள், மெதுவாக என்னை



நோக்கி வந்தாள். ''ஜெய்கர்! ஏன் இப்படி மாறிட்டே....?''

எனக்குப் பொறுமையே போய்விட்டது. ''சரிதான் போடி.... எனக்கு எல்லாம் தெரியும் ! பெரிதாகச் சொல்ல வந்துவிட்டாள்!''

அவள் என்னை ஏறிட்டுப் பார்த்துவிட்டு மெதுவாக அந்த இடத்தைவிட்டு அகன்றாள். ''தங்கையாம்..தம்பியாம்... எல்லாருமாகச் சேர்ந்து என்னை ஏய்க்கிறார்கள்! எனக்குப் புரிந்து கொள்ளும் வயசு வரவில்லையா என்ன? நான்தான் மூன்றும் ஃபாரம் படிக்கிறேனே !''

நடு ஹாலில் திடீரென்று நிசப்தம் நிலவியது. பிறகு மறுபடியும் கலகலப்பு ஆரம்பமாகிவிட்டது. இந்த முறை அண்ணா பூப்பந்தும் அதற்கான 'பாட்'டும் வாங்கி வந்திருந்தான். நான் இவ்விதம் இருக்கும் பொழுது அவன் வேண்டும் என்றேதான் பந்தும் 'பாட்'டும் வாங்கி வந்திருப்பான்! அக்கறை இருந்தால் போன வருடம் தீபாவளிக்கு வந்திருந்த சமயம் வாங்கி வந்திருக்க மாட்டானா ? எல்லோரும் ஜாலியாக 'நெட்' கட்டி விளையாடுவார்கள்! நான் மட்டும்?

எனக்கு உடம்பு எல்லாம் பற்றி எரிவது போல் இருந்தது. முன்பெல்லாம் அண்ணா என்னிடம் எப்படிப் பேசி விளையாடுவான்! ஆனால் இப்பொழுது எட்டிக்கூடப் பார்க்கவில்லையே.... என்னை மறந்தே விட்டானா...? நான் அசதியுடன் கண்களை மூடிக் கொண்டேன்.

சில நிமிடங்களில் கதவு திறக்கும் ஓசை கேட்டது. ஒரு வேளை அண்ணாதான் வருகிறானோ...? ஏதோ ஒரு நைப்பாசை. ஆனால் வந்தது அம்மா !

''இந்தா, ஜெய்கர் கேக்! வேண்டாம் என்று சொல்லிவிட்டாயாம். உனக்காக அண்ணா வாங்கி வந்திருக்கானே!'' அம்மா இதமாகச் சொன்

ளுன். எவ்வளவு அழகாக அம்மா பொய் சொல்லுகிருள்! அண்ணு எனக்காக வாங்கி வந்தாலும்....! நான் இம்முறை வேண்டுமென்றே 'கேக்'கை வாங்கிக் கொண்டேன். அம்மா திருப்தியுடன் அகன்றதும், என் ஆத்திரம் தீர, 'கேக்'கை ஜன்னல் வழியாகத் தூக்கி எறிந்தேன். என்னிடமா வேஷம் போடுகிருர்கள்! இந்த ஜெய்கரை யார் என்று நினைத்துக் கொண்டார்கள்?

அதற்குள் தோட்டத்தில் அண்ணுவின் குரல் கேட்டது. ஜன்னல் வழியாகப் பார்த்தேன். அண்ணு 'நெட்' கட்டிக் கொண்டிருந்தான். கமலி, பாபு, ரவி மூவருக்கும் 'பாட்டை எப்படிப் பிடித்து, எப்படிப் பந்தைப்போட வேண்டும் என்று சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவர்களது மகிழ்ச்சி ஆரவாரம் என் செவிகளில் நாராசமாக விழுந்தது. நான் பொருமை மழை பொழியும் கண்களுடன் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். என் அருகில் யாரோ அமருவது போன்ற உணர்வு. நான் திடுக்கிட்டுத் திரும்பினேன். அண்ணு!

நான் கோபத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். இப்பொழுது மட்டும் ஏன் இங்கே வருகிருனும்!

''ஜெய்கர்! உடம்பு வலியெல்லாம் எப்படி இருக்கிறதப்பா?'' அண்ணுவின் கேள்வியை வேண்டும் என்றே அசட்டை செய்தேன். அண்ணு விடவில்லை. ''ஏன் இப்படி வேர்த்துக் கொட்டுகிறது?'' தன் கைக் குட்டையால் துடைத்து விட்டான். நான் அண்ணுவின் கைகளை உதறினேன். ''என்னேடு ஒன்றும் பேச வேண்டியதில்லை.'' அண்ணு சிரித்தான். ''நான் உன்னேடு பேச வேண்டும் என்றே வந்திருக்கிறேன். என்னைப் போய்ப் பேச வேண்டாம் என்கிருயே.''

நானு மசிபவன்? ''போய், போய்'' என்று கூவினேன்.

அண்ணு இன்னும் நெருங்கி உட்கார்ந்தான். ''உண்மையாகத்தான் ஜெய்கர்! என்னை நம்பமாட்டாயா? பேப்பரில் அந்தச் செய்தியைப் படித்ததும் எனக்கு எத்தனை பெருமையாக இருந்தது தெரியுமா? என் நண்பர்கள் எல்லோரும் என்னிடம் உன்னைப் பற்றிக் கேட்ட போது என் மனம் எப்படிப் பெருமிதம் அடைந்தது தெரியுமா? உடனே வர முடியவில்லையே என்று துடித்துவிட்டேன் ஜெய்கர்!'' அண்ணு நிறுத்தினுன். நான் அசையவில்லை.

''நீ எவ்வளவு தைரியமாக அந்தக் குழந்தையை லாரி அறைந்துவிடும் முன்பு காப்பாற்றினுய்! அதனுல் உன் கால் ஒன்று ஊனமானது பற்றி எனக்குக் கொஞ்சம்கூடக் கவலை இல்லை! நான், ரவி, பாபு அனைவரும் உனக்காக இருக்கிறேம். உன்னுல் நம் குடும்பத்துக்கு எவ்வளவு பெருமை!''

அண்ணுவா இப்படிச் சொல்கிறுன்! அப்படியானுல் நாம் போட்ட கணக்கு அவ்வளவும் தப்பா? ஆனுலும் என் மனத்தில் ஓர் அரிப்பு! நான் முதன் முறையாக அவன் கண்களைப் பார்த்துப் பேசினேன்.

''அப்படியானுல், வந்தவுடனேயே—நீ ஏன் என்னுடன் பேசவில்லை? என்னைப் பார்க்கக் கூட வரவில்லையே?''

என் குற்றச்சாட்டைக் கேட்டவுடன் அண்ணு திகைப்பான் என்று பெருமிதமாக இருந்தேன். மாருக, அவன் சிரித்தான்.

''அப்பொழுது நான் வந்திருந்தால், என்னுடன் அம்மா, ரவி, பாபு, கமலி முதலியோரும் வந்திருப்பார்கள்! அப்பொழுது நீ எல்லோரும் உன்னை வேடிக்கை பார்க்க வந்திருக்கிருர்கள் என்று நினைத்தால்....?''

நான் விழித்தேன். அண்ணு சொல்வதும் உண்மைதான்! அப்பொழுது நான் அவர்களைச் சந்தேகித்திருப்பேன்!

நான் அண்ணுவின் கைகளைப் பற்றிக் கொண்டேன். ''அண்ணு! என்னை மன்னித்து விடு! நான் ஏதேதோ நினைத்துக் குழம்பிக் கொண்டிருந்தேன்.'' என் கண்களில் நீர் திரண்டு நின்றது. அண்ணு அதைச் சுண்டி எறிந்தான்.

''ஜெய்கர்! நான் உனக்கு நிறையப் புத்தகங்கள் வாங்கி வந்திருக்கிறேன். இனி மேல் நீ கவலையே படக் கூடாது. தெரியுமா?'' அண்ணு எழுந்து சென்று சில நொடிகளில் திரும்பி வந்தான். அவன் கைகளில் பல வண்ண அட்டைகளுடன் நிறையப் புத்தகங்கள்! அண்ணு பாவம்! எனக்காக எவ்வளவு வாங்கி வந்திருக்கிறுன். நான் அவனை எப்படியெல்லாம் பேசி விட்டேன். என் மனம் உருகியது.

பந்தாட்டம் முடிந்து, அண்ணுவைத் தேடிக் கொண்டு வந்த என் அருமைத் தங்கை கமலியும், தம்பிகள் ரவி, பாபுவும் என் அறைக்குள் தயங்கியவாறே நுழைந்தனர். கமலி, என் முகத்தில் கண்ட அமைதியைக் கண்டு பெரிதும் திருப்தியுற்ருள் என்பதை அவள் கண்கள் மூலம் அறிந்தேன். எனக்கு ஞானேதயம் வந்துவிட்டது.

இவ்வளவு நல்ல அண்ணுவைப் பெற நான் எவ்வளவு கொடுத்து வைத்தவன்!





மூளைக்கு வேலை • மூளைக்கு வேலை •

★ மேலேயுள்ள ஒவ்வொரு படத்திலும் உள்ள தவறுகள் என்னவென்று கூற முடியுமா?

(விடை: வீட்டின் நுழைவாயில் மாடியில். கோழிக்கு வாத்தின் கால்கள். இலைக்கும் பழத்துக்கும் சம்பந்தமில்லை. மாட்டின் காது கொம்புகளுக்கு இடையே உள்ளதே! துப்பாக்கியின் விசை திரும்பியுள்ளது.)


★ இங்கே எந்த இரு பஃபூன்கள் ஒரே மாதிரி இருக்கிறார்கள்? (விடை: 3ம் 4ம்)

★ நடுவிலுள்ள எலிகள் நடுங்கிக் கொண்டிருக்கின்றன. காரணம் பூனை மட்டுமல்ல. தங்களை அடைய அதற்கு மூன்று வழிகள் இருக்கின்றனவே என்ற பீதியும்தான்.

★ இங்கேயுள்ள முகங்களில் மாறுபட்ட முகத்தை வேறு படுத்திக் காட்டுங்கள்.

(விடை: 4ம் எண்ணுள்ள முகம்)





மூளைக்கு வேலை • மூளைக்கு வேலை •

அப்பாவின் பெருமை

எஸ்.ஜே.டி.

ஒரு மணி நேரத்துக்கு மேலாக சினிமாவுக்குப் போக ஒற்றைக் காலில் நிற்கும் அண்ணன் 'பாலன்ஸ்' இழப்பதைக் கண்டதும் 'ஸ்டெடியாக' நிற்பதற்கு ஒரு கட்டையைக் கொண்டுவந்து, மடக்கி வைத்திருக்கும்காலுக்கு அடியில் போட்டு உதவினாள் உஷா.

'நறுக்'கென்று அவள் தலையில் ஒரு குட்டு வைத்துவிட்டு அவளுக்குச் சான்ஸ் கொடுக்காமல் இவனே 'ஓ' என்று அழ ஆரம்பித்துவிட்டான்.

ஒரு காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்றால் மௌலி மூலையில் போய் 'ஒத்தைக்கால் தவம்' புரிய ஆரம்பித்து விடுவான். பெரு விரல் நகத்தால் சுவரைக் கீறிக் கொண்டே யாராவது தன்னைத் தாண்டிப் போகும் போது மட்டும் கேட்கும்படியாகச் சத்தமாகக் கேவுவான். சில சமயங்களில் இந்தத் தவத்துக்குப் பலன் கிடைத்து விடுவதுண்டு.

ஆனால் இன்றைக்கு ஒரு மணி நேரத்துக்கு மேலாக நின்றும் கால் கடுத்துப் போனதுதான் மிச்சம்.

'தவத்தைக் கலைத்துக்கொள்ளலாமா?' என்று நினைத்த போது அப்பா வருவது தெரியவே கடைசியாக ஒரு 'ட்ரயல்' பார்த்துவிட முடிவு செய்தான். 'ஹூம் ...ஹூம்...ஹூஹூம்...'' என்று பெரிதாகக் கேவினான்.

''அழுமூஞ்சி, அழுமூஞ்சி! முகத்தை அலம்பிட்டுப் புறப்படு. போய்த் தொலையலாம்'' என்று அப்பா சொன்னாரோ இல்லையோ 'ஹய்யா, ஹய்யா!' என்று குதியாட்டம் போட்டுக்கொண்டு குளியலறைக்கு ஓடி முகம் கழுவிக் கொண்டு திரும்பினான்.

''தலைவா, தவப் புதல்வா!''

குளியலறை வாசலில் டவலுடன் நின்று வரவேற்புக் கொடுத்த உஷாவின் மீது பாயாமல் நல்லபடியாகவே, ''டீ... சீக்கிரம் புறப்படுடீ — ஆறரை மணிக்கு 'ஷோ' ஆரம்பித்துவிடுவான்'' என்று அவளை அவசரப்படுத்திவிட்டுப் போய் அம்மாவையும் கிளப்பினான்.

எல்லோருக்கும் முன்னதாக மௌலி புறப்பட்டு வாசலில் வந்து நின்று கொண்டான்.

யாரோ கிராமத்து ஆட்கள் இருவர் சைக்கிளில் வந்து இறங்கினர்.

''டாக்டர் ஐயா இருக்கிறாரா தம்பி?''

'இருக்கிறார்' என்று சொல்ல வாய் எடுத்த மௌலி சட்டென்று நிறுத்திக் கொண்டான். அவர்களிடம் காணும் பரபரப்பைக் கண்டதும் அவனுக்கு விளங்கிவிட்டது. ஏதோ அவசர கேஸ். அப்பாவை அழைத்துப் போகத்தான் வந்திருக்கிறார்கள்.

கொஞ்சமும் தயங்காமல், ''இல்லை, கிளப்புக்குப் போயிருக்கார்'' என்று பொய் சொல்லி விட்டான்.

வந்தவர்கள் ஏமாற்றத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ''ஐயா வீட்டிலே இருப்பாருன்னு சொன்னாங்களே...!''

''அதான் இல்லைன்னு சொன்னேனே! எங்கேயிருந்து முளைச்சிடுவார்?'' என்று எரிந்து விழுந்தான். 'சீக்கிரமாக இவர்களை விரட்டிவிட வேண்டும்...'

''டேய், மௌலி!''

உள்ளேயிருந்து வந்த அப்பாவின் குரலால் அப்படியே நடு நடுங்கிப் போனான் மௌலி. வெளியே வந்து, ''போ, உள்ளே!'' என்று அவனை மிரட்டி அனுப்பினார். மௌலி பயந்து போய் ஓடிவிட்டான்.

வெளியே அவர்களிடம் பேசிவிட்டுத் திரும்பிய அப்பா, ''ஒரு படிக்கிற பையன் இப்படித்தான் பொய் சொல்கிறதா. ம்?'' என்று மௌலியைக் கண்டித்துவிட்டு, ''நீங்கள் தயாராக இருங்கள். நான் ஓர் ஐந்து நிமிடம் கிளினிக் வரையில் போய் ஒரு கேஸைக் கவனித்துவிட்டு வந்து விடுகிறேன்'' என்று காரை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டார்.

மௌலிக்கு 'ஓ'வென்று அழ வேண்டும் போல் இருந்தது. சைக்கிளில் வந்த ஆட்களை ஆத்திரம் தீரச் சபித்தான். இந்த அப்பா ஏன் விழுந்தடித்துக் கொண்டு ஓட வேண்டும்? ஊரில் உள்ள டாக்டரெல்லாம் இப்படித்தான் அலைகிறார்களா? இவர் என்னமோ பெரிசா சேவை செய்கிறாராம்! ஞாயிற்றுக் கிழமை அப்பாவோடு ஜாம் ஜாம் என்று காரில் ஒரு சினிமாவுக்குப் போகலாம் என்றால்...

''ஏமாந்து போனாயே? எலி கடிச்சு தின்னாயே!'' என்று உஷா வேறு அவன் வயிற்றெரிச்சலைக் கிளப்பிக் கொண்டிருந்தாள்.

நேரம் ஆகிக் கொண்டேயிருந்தது. அப்பா மட்டும் வரவேயில்லை.

''மொனாபலி விளையாடலாமேடா?'' அவன் ஏமாற்றத்தைச் சரிக்கட்டப் பார்த்தாள் அம்மா.



''மோனுபலியும் வேண்டாம், மண்ணுங்கட்டியும் வேண்டாம்'' என்று ஆத்திரத்துடன் மேசை மீதிருந்த பூச்செண்டைத் தட்டிவிட்டான்.

அப்பா எப்போது திரும்பினர் என்பதே மௌலிக்குத் தெரியாது. சாப்பிடாமலே கோபத்துடன் படுத்தவன் தூங்கிப் போய்விட்டான்.

இரவு திடீரென்று யாரோ கதவைத் தட்டவே அப்பா எழுந்து சென்ருர். மௌலிக்கும் பசி காரணமாகத் தூக்கம் கலைந்துவிடவே யாரென்று பார்க்க அவனும் எழுந்து சென்ருன்.

அப்பா கதவைத் திறந்தார். ஒருவனைக் கீழே கிடத்திவிட்டு மூன்று பேர் நின்றிருந்தார்கள். கீழே கிடந்தவனின் உடல் வலிப்பினுல் இழுத்துக் கொண்டிருந்தது.

''டாக்டர் ஐயா! அரை மணி நேரமா இப்படி வலிப்பு ஆளைத் தூக்கிப் போடுது. தயவுசெய்து பாருங்க. நீங்க கையை வைச்சாத்தான் பிழைக்கும்.''

அப்பாவோ, ''ம்! ம்! இப்படிக் கொண்டு வந்து இந்தப் பெஞ்சியின் மீது படுக்க வையுங்கள்'' என்று சொல்லி விட்டு மருந்துப் பையை எடுத்து வரத் தம் அறைக்குச் சென்ருர்.

முரளி படுக்கையில் இருந்தபடியே எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று அப்பாவை வழி மறித்தபடி நின்ருன் ஒருவன். அவன் கையில் ஒரு கத்தி பளபளத்தது.

''டாக்டர் சார்...! சத்தம் போடக் கூடாது. பேசாமல் அந்தப் பீரோச் சாவியை இப்படிக் கொடுங்கள்'' என்று மிரட்டினுன் ஒருவன்.

மௌலிக்கு ஒரே பயம். அலறக்கூட முடியாமல் நாக்கு தொண்டைக் குழியில் சிக்கிக் கொண்டது. அதே சமயம் இருவர் அவன் முன் கத்தியுடன் வந்து அவனையும் தூங்கிக் கொண்டிருக்கும் அம்மாவையும் உஷாவையும் கண் காணித்து நின்ருர்கள்.

இத்தனை நேரம் நோயாளி போல் படுத்திருந்தவன் எழுந்து அலமாரியைத் திறந்து பணத்தையும் மற்றும் நகைகளையும் அள்ளிப் போட்டு மூட்டையாகக் கட்டிக் கொண்டான். பத்து நிமிஷங்களுக்குள் அந்த வேலையை முடித்துக் கொண்டு அப்பாவையும் கொண்டு வந்து அறையில் தள்ளி வெளிப்பக்கம் தாழிட்டுக்கொண்டு போய்விட்டார்கள்.

அம்மாவை எழுப்பி விஷயத்தைச் சொன்னதும் 'ஐயையோ!' என்று அலறினுள். பிறகு, ''நல்ல வேளை காலையில்தான் முக்கால்வாசி நகைகளைப் பார்வதியம்மாள் இரவல் வாங்கிப் போனுர்கள்....'' என்று ஆறுதல் அடைந்தாள். உஷாவுக்குத் திருடர்கள் வந்த போது தன்னை எழுப்பவில்லை என்று கோபம்.

மௌலியோ 'இந்த அப்பாவுக்கு நல்லா வேணும். சேவை செய்யறேன், சேவை செய்யறேன்னு கிடந்து அலைந்ததுக்குத் தண்டனை' என்று மனசுக்குள் கறுவினுன். நேற்று சினிமா புரோகிராம் கெட்டுப் போனதால் ஏற்பட்ட ஆத்திரம் வேறு அவனுக்கு. அப்பாவிடமும் அதைச் சொன்னுன்.

அப்பாவோ கொஞ்சமும் பதற்றப் படாமல், ''அப்படிச் சொல்லக் கூடாது மௌலி. உதவி செய்யும்போது ஏமாருமல் இருக்கிறதுக்கு வேணும்னு



மந்திரம் போட்டு மாங்காய் பறிக்கும்
தந்திரம் ஏதும் செல்லாது—இந்த
மாங்காய் எல்லாம் பார்த்த பின்னல்
மனமும் சும்மா நில்லாது.

— குடுக்கையார்

—வண்ணப்படம்: கே. ஜீ. நடேசன்



இந்தச் சம்பவம் பாடமா இருக்கலாமே தவிர இரக்கம் காட்டாம இருக்கிறதுக்குப் பாடமா இருக்கக்கூடாது'' என்ருர்.

அவர் ஒரு காந்தம் பதித்த டார்ச் லேட்டைக் கட்டிலி லிருந்து உருவிய கட்டை ஒன்றின் விளிம்பில் கட்டி அதை வெண்டிலேட்டர் ஜன்னல் வழியாகக் கதவின் வெளித் தாளின் மீது படும்படி தொங்க விட்டார். மாக்னெட்டில் இரும்புத் தாழ்பற்றிக் கொண்டதும் லாகவமாக மேலே தூக்கித் தள்ளினர். இரண்டொரு முறை முயன்றபிறகு தாழ் விலகியது.

கதவைத் திறந்து வெளியே வந்தவர் போலீசுக்குப் போன் செய்தார்.

அன்றைக்கு மௌலியின் பள்ளியில் உல்லாசப் பயணம் புறப்பட்டார்கள். பெயரும் பணமும் கொடுத்திருந்த எல்லோரும் ஒரே ஒரு மாணவனைத் தவிர வந்திருந்தார்கள்.

'' மதன்தான் வரலே. அவனுடைய அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். அவன்தான் இருந்து கவனித்துக் கொள்ளணுமாம்.''

''இவன் என்ன கஞ்சி வைத்துக் கொடுக்கப்போருனமா?'' என்று கிண்டலாகச் சொன்ன மௌலி, ''எங்க வீட்டிலே கூடத்தான் திருட்டு நடந்திருக்கு. எல்லாவற்றையும் அடிச்சுக்கிட்டுப் போயிட்டாங்க... அப்படி இருந்தும் நான் வரலே?'' என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டான்.

இரண்டு நாள் உல்லாசப் பயணம், மகாபலிபுரம், நெய்வேலி, சாத்தனூர் அணை, திருவண்ணமலை, செஞ்சி எல்லாம் ஜாம் ஜாமென்று சுற்றிவிட்டுத் திரும்பினர்கள்.

மௌலி வீட்டுக்குத் திரும்பிய போது ஒரு சந்தோஷமான செய்தி காத்திருந்தது. ' திருடர்களைப் பிடித்துவிட்டார்கள் ; திருட்டுப் போனது எல்லாம் கிடைத்துவிட்டது' என்பதுதான் அது. அப்பாவை இரண்டு நாட்கள் பார்க்காததே கஷ்டமாக இருந்ததால் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளினிக்குக்கே கிளம்பிவிட்டான் மௌலி.

ஓடிப் போய் அப்பாவைக் கட்டிக் கொண்டு கதை கதையாக அளந்தான். பிறகு திருடர்கள் பிடிபட்டதைப் பற்றி விசாரித்தான்.


''ஆமாம். பெங்களூரிலே போய்த் திருடியவர்களைப் பிடித்திருக்கிருர்கள். அதுவும் யார் பிடித்தது தெரியுமா ? உன் ஸ்கூல் மேட் மதன் இருக்கிருனல்லவா ? அவனுடைய அப்பாதான் !''

மதன் என்றதும் மௌலிக்கு ஞாபகம் வந்தது. ''அவன்தாம்பா எக்ஸ்கர்ஷனுக்கு வராமல் நின்னுட்டான்.''

''ஆமாம், பாவம் அவன். அவனுடைய அப்பா நம்ம வீட்டிலே நடந்த திருட்டு விஷயமா திடீர்னு பெங்களூர் போகவேண்டியானதும் எக்ஸ்கர்ஷனுக்குப் போக முடியாம ஏமாந்துட்டான். எக்ஸ்கர்ஷனுக்கு வர முடியாம போனலும் கூடச் சந்தோஷமா அம்மாவுக்கு இங்கேயிருந்து உதவியிருக்கான் அவன்! உனக்கு உன் சந்தோஷம்தான் - முக்கியம்....'' அப்பா சொல்வது சரி என்று தோன்றினலும், ''போங்க டாடி, நீங்க ரொம்ப போர்!'' என்று அவரிடமிருந்து கழன்று கொண்டான் மௌலி.

ஆனல் மறு நாள் பள்ளியில் மதன், ''மௌலி உங்க அப்பாதான் ராத்திரிப் பகலாக் கண் விழிச்சு எங்க அம்மாவைக் காப்பாத்தினரு'' என்று நன்றிப் பெருக்குடன் சொன்ன போதுதான் தன் அப்பாவின் பெருமையை முழுதும் உணர்ந்தான் அவன்.

'' உங்க அப்பாவும்தான் திருட்டுப் போன எங்கள் பணத்தையும் நகைகளையும் கண்டு பிடிச்சுக் கொடுத்தாரு '' என்றுபதிலுக்கு நன்றி கூறினன் மௌலி.



சிரிக்க சிரிக்க




''பாட்டி வாத்தியார் எனக்குப் புல்லாங்குழல் வரலே வராதுன்னு சொல்லி அதை என் தலை மேலே போட்டு உடைத்து விட்டார்!''

''நல்ல காலம்! உனக்கு மிருதங்கம் சொல்லி வைக்காமல் போனானே!''



பையன் அப்பாவுக்குக் கடிதம் எழுதினான்: ''அவசரமாகப் பணம் தேவையாக இருக்கிறது. இங்கே என்னைத் தெரிந்தவர்களும் கிடையாது. என்ன செய்வதென்று தெரியல்லே!''

அப்பா பதில் எழுதினார்: ''இங்கு என்னை எல்லாருக்கும் தெரியும். அதனால் பணம் கிடைக்கவில்லே.''



ஆரியபட்டர் (அந்தக்காலம்)

1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 16 17 1

அ. ராம்கோபால்

☐ இந்திய வரலாற்றில் குப்த மன்னர்களின் ஆட்சிக் காலம் ஒரு பொற்காலம். அம்மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் வான சாஸ்திரமும் சோதிட சாஸ்திரமும் மிக உச்ச நிலையை எய்தியிருந்தன. இதற்குக் காரணம் அப்போது வாழ்ந்த ஆரிய பட்டர், வராஹமிஹிரர், பாஸ்கராச்சாரியர் போன்ற பேரறிஞர்களே. ஆரியபட்டர் ஒரு மாமேதை. இந்திய சோதிட சாஸ்திரத்தின் தந்தை இவரே எனக் கருதப்படுகிறது. சோதிட சாஸ்திரத்தில் மட்டுமல்லாது கணிதத்திலும் மிகவும் வல்லுனராக இவர் விளங்கினார். பல கணக்குச் சூத்திரங்களை (formula) தாமே முதன் முதலாக அவர் வகுத்ததோடு அவற்றுக்கு விளக்க உரையும் எழுதி வைத்தார். இன்றும்கூடக் கணிதத் துறையில் அவரது சூத்திரங்கள் வெகுவாகப் பயன்பட்டு வருகின்றன.

தசாம்ச முறை

☐ இப்போது உலகெங்கும் தசம முறை (decimal system) வழக்கில் உள்ளது. இந்தத் தசம எண்மானம் அங்க கணிதத்தை எளிதாக்க உதவியுள்ளது. இது முன்பே பாரதத்தில் கையாளப்பட்டு வந்த ஒன்று முதல் ஒன்பது மற்றும் பூஜ்யம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டதே. பூஜ்யம் முதன் முதலாக நம் நாட்டில்தான் கண்டறியப்பட்டது. அதை யார் கண்டறிந்தார்கள் என்பது தீர்மானமாகத் தெரியவில்லை. ஆனால் புகழ்பெற்ற வெளிநாட்டு யாத்திரீகர்களான இப்னவேஷியா (ஒன்பதாம் நூற்றாண்டு),— அலம்சூதி (பத்தாம் நூற்றாண்டு) அல்பரூனி (பதினோராம் நூற்றாண்டு) ஆகியோர் தாங்கள் எழுதியுள்ள நூல்களில் ஹிந்துக்களே பூஜ்யத்தைக் கண்டறிந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வராஹமிஹிரர்

☐ முன்பு நம் நாட்டில் எண்களைக் குறிப்பிடச் சில வார்த்தைகளை எண் குறியாகப் பயன்படுத்தி வந்தார்கள்.

உதாரணமாக வராஹமிஹிரர் தமது நூலில் 427ஐக் குறிப்பிட ''சப்தார்ஸ்வ வேத சங்கியம்'' என எழுதியுள்ளார். இதில் சப்த என்ற வார்த்தை 7ஐயும், ஆர்ஸ்வ என்ற வார்த்தை 2ஐயும், வேத என்ற வார்த்தை4 ஐயும் குறிப்பிடுபவையாகும். ஆகவே, சப்தார்ஸ்வ வேத என்பது முறையே 7, 2, 4 ஆகிய எண்களைக் குறிப்பிடுபவையாகும். அக்காலத்தில் எண்களை வலமிருந்து இடமாகக் குறிப்பிடும் வழக்கம் இருந்தது.

ஆரியபட்டர்

☐ ஆரிய பட்டர் தாம் எழுதியுள்ள கணித நூலில் பத்து, நூறு, ஆயிரம், பத்தாயிரம், ஒரு லட்சம், ஒரு கோடி, பத்துக் கோடி போன்ற எண்களைக் குறிப்பிடப் பின்கண்டபடி வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

1—ஏக, 10—தச, 100—சத, 1000—சஹஸ்ர, 10,000 — அயுத, 100000—பிரயுத, 1000000—கோடி, 10000000 —அபுர்த, 100000000 — விருந்த.

இதுவன்றி ஆர்ய பட்டர் எழுத்துக் குறி மூலம் எண்களைக் குறிப்பிடும் ஒரு முறையையும் புதிதாக உருவாக்கினார்.

கிரகணங்கள்

☐ சூரிய கிரகணம் ஆகட்டும், சந்திர கிரகணம் ஆகட்டும் ராகு அவற்றை விழுங்குவதால் ஏற்படுவதில்லை. சந்திரனின் மீது பூமியின் நிழல் படுவதால் சந்திர கிரகணம் ஏற்படுகிறது. பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திரன் குறுக்கிட்டுச் சூரியனை மறைப்பதால், சூரிய கிரகணம் ஏற்படுகிறது என ஆரிய பட்டர் அக்காலத்திலேயே தமது நூல்களில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இது மட்டும் அல்ல. அக்காலத்திலேயே பூமி தன்னைத்தானே சுற்றுவதோடு சூரியனையும் சுற்றி வருகிறது எனக் கணக்கிட்டுக் கூறிய முதல் இந்தியரும் அவரே.

வருடம்

☐ 365.2586805 நாள் ஒரு வருடமாகும் என ஆரியபட்டர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். 365.2631579 நாட்கள் ஒரு வருடம் என தாலமி கணக்கிட்டுக் கூறியுள்ளார். 365.2563604 நாட்கள் ஒரு வருடம் என

இப்போது விஞ்ஞானிகள் நவீன சாதன வசதிகளின் உதவி கொண்டு கணித்துக் கூறுகிறார்கள். அவர்கள் கூறும் இந்தக் கணக்கு ஆரியபட்டர் இன்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்பு நவீன சாதன வசதிகள் எதுவுமின்றிக் கணித்துக் கூறியதற்குக் கிட்டத்தட்ட ஒத்தே உள்ளது.

பூமியும் கிரகங்களும் சூரியனிடமிருந்தே ஒளி பெறுகின்றன என்பதையும் ஆரியபட்டர் தமது நூல்களில் குறிப்பிட்டிருக்கிறார். வட்டத்தின் பரப்பு பை-ஆர்-ஸ்கொயர் என்பது இப்போது ஜியோமிதியில் (Geometry) வழக்கில் உள்ள மிக முக்கிய சூத்திரங்களில் ஒன்றாகும். இந்தச் சூத்திரத்தின் தந்தை ஆரியபட்டர்தான்.

முதலாவது ஆரிய பட்டர் தமது இருபத்து மூன்றாவது வயதில் அதாவது கி. பி. 499ல் ஆரிய பட்டீயம் என்ற அற்புத நூலை இயற்றினார். இவர் கி. பி. 476ல் பிறந்தவர். ஆனால் இவர் எங்கே பிறந்தார், வாழ்ந்தார் என்பது குறித்து வரலாற்று ஆசிரியர்களிடையே கருத்து வேற்றுமை நிலவுகிறது. இவர் அக்காலத்தில் மகத நாட்டின் தலைநகரான பாடலிபுத்திரத் தருகே (தற்போது பாட்னா நகர்) குசும்பூரில் பிறந்தவர் எனச் சிலர் கூறுகிறார்கள். வேறு சிலரோ தமிழ் நாட்டில் அஸ்யக என்ற ஊரில் பிறந்தவர் எனக் கூறுகிறார்கள். இந்த ஊர் தமிழ் நாட்டில் எங்குள்ளது என இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. திருவனந்தபுரத்தில் ஆரியபட்டீயத்துக்கு நீலகண்டி என்ற ஓர் உரை நூல் அக்காலத்தில் எழுதப்பட்டது. ஆரியபட்டர் தென்னாட்டவர் என்பதற்கு ஆதாரமாக இதையும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

ஆரியபட்டீயம்

□ ஆரியபட்டரின் ஆரிய பட்டீயம் நான்கு பாகங்களாக (கண்டம்) பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பாகமான கீதிகா பாதத்தில் 10 சுலோகங்கள். இதில் எண்களை எழுத்துக்கள் மூலம் குறிப்பிடும் முறை விளக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கண்டமான கணித பாதத்தில் 33 சுலோகங்கள். இதில் வர்க்க மூலம், கன மூலம் கண்டு பிடிப்பதற்கான விதிகள் விளக்கப்பட்டுள்ளன. பரப்பளவு, சராசரிகள், வட்டத்தின் சுற்றளவு, வட்டத்தின் பரப்பளவு கண்டுபிடிப்பதற்கான விதிகள் கூறப்பட்டுள்ளன. மூன்றாவது கண்டமான காலகிரியா பாதத்தில் சூரிய வருடம், சந்திரமாதம், நட்சத்திர மாதம் அதி மாதம், கிரகணங்களில் தேதி, இடம் கண்டுபிடிப்பதற்கான முறைகள் 25 சுலோகங்களில் கூறப்பட்டுள்ளன. நான்காவது கண்டமான கோல பாதவில் துருவ வட்டம், அடிவானம் (horizon) பற்றிய விவரங்கள் 50 சுலோகங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.


இந்திய வான சாஸ்திரத்திலும் கணித சாஸ்திரத்திலும் ஒரு புது யுகத்தைத் தோற்றுவித்த ஒரு யுக புருஷர் முதலாவது ஆரிய பட்டர் என்றால் அது மிகையாகாது. அவரே இந்திய வான வெளி சாஸ்திரத்தின் தந்தை என்பதாலேயே 1975 ஏப்ரல் 19ம் தேதி வான வெளியில் முதன் முதலாக ஏவப்பட்ட நம் முதல் செயற்கைக் கோளுக்கு 'ஆரியபட்ட' என்ற நாமத்தைச் சூட்டியது இந்திய அரசு.



நீலா மாலா

அழ. வள்ளியப்பா எழுதும் புதிய தொடர் கதை





உங்கள் பிறந்தநாளுக்கு


ஒரு பரிசு காத்திருக்கிறது!

(23-ம் பக்கத்தில் விவரம்)

ஆளும் மாளிகை

'தராஜா'

- முதலில் — நம்மை ஆளும் மாளிகை!
- யார் கட்டியது?
- எப்போது?
- ஆரார் ஆண்டவர்கள்?
- அதிசயங்கள் என்னென்ன?



எல்லாம் கோகுலம் புத்தாண்டு

உங்கள் நண்பர்களுக்கெல்லாம்

நியூஸ் ஸென்ஸ்

புதிய பகுதி



நியூஸ்-ஸென்ஸ் — செய்திகளில் நமக்குத் தேவை இதுதான் என்பதைப் பகுத்தறிந்து தரும் பகுதி இது. இந்த நியூஸ் எஸன்ஸாக இருக்கும். ஆனால் இது உங்களுக்கு நியூஸன்ஸாக இருக்காது என்பது மட்டும் நிச்சயம்.



பூதத்தீவு

புதிய சித்திரத் தொடர்

கதை: **வாண்டுமாமா**

சித்திரம்: விஜு

"கொளுத்தும் வெயிலில் வெளுத்து வாங்கினேன்"

...களே பங்கு கொள்ளும் ஒரு போட்டி!

...உங்கள் கோடை கழிந்தது எப்படி? ...குலத்தில் இரண்டு பக்கம் வரும்படி ...வையாக எழுதுங்கள். பாடுபட்டால் ...ன் உண்டு. கட்டுரை அனுப்பக் ...டிசித் தேதி 30–6–76தான். இப் ...தே இட்டம் தீட்டுங்கள்!



...ம் முதல்

ராஜா திருந்தினான்!

தலை முடியை அலை அலையாகப் படிய வாரிக் கொண்ட ராஜா, மீண்டும் ஒரு முறை கண்ணாடியைப் பார்த்துச் சரி செய்து கொண்டான். தூசி படிந்த காலணிகள் ஒரு மூலையில் போட்டது போட்டபடியே கிடந்தன. ராஜாவின் முகம் கோபத்தால் சிவந்தது. 'பீட்டர்' என்று ஆத்திரத்துடன் கத்தியவாறு பின் கட்டை நோக்கி விரைந்தான்.

ராஜா வேகமாக வருவதைக் கண்ட பீட்டருக்குத் தன் 'சின்ன எஜமானி'ன் கோபத்துக்கான காரணம் உடனே விளங்கிவிட்டது.

''ஏண்டா, பீட்டர்! என் ஷூசுக்கு நேற்றைக்கே பாலிஷ் போடச் சொன்னேனா இல்லியா? தண்டத்துக்கு உட்கார்ந்து என்ன பண்ணறே?'' ராஜாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

''ஏன் ராஜா, இப்படிக் கோவிச்சுக்கிறே? இரண்டு நாளா ஒரே வேலை. வைச்சிட்டுப் போ. அப்புறமாப் போட்டு வைக்கிறேன்.''

பீட்டர் கூறிய பதிலைக் கேட்ட ராஜா நற நறவென்று பல்லைக் கடித்தான். ''அத்தனை திமிராடா உனக்கு?'' என்று சிறியவன் மறுகணம் அவன் கன்னத்தில் பளாரென்று அறைந்தான்.

பீட்டர் கன்னத்தைப் பிடித்துக் கொண்டான். அவன் கண்களில் கண்ணீர் தேங்கியது.

பின்கட்டில் எழுந்த கூச்சலைக் கேட்டு அங்கு வந்த ராஜாவின் தாய் நடந்ததைக் கண்டு அப்படியே திகைத்துப் போய் நின்றுவிட்டாள்.

''ராஜா, இப்படி வா'' என்று அவனைத் தனியாக அழைத்துச் சென்றவள், ''இதோ பாரு. வர வர உன் பேச்சும் செயலும் கொஞ்சம்கூட நல்லாயில்லை. வேலைக்காரன் என்கிறதுக்காக இப்படியா தன்மையில்லாமல் நடந்துக்கிறது?'' என்றாள்.

''போம்மா, நேத்தையிலேயிருந்து 'ஷூ'க்குப் பாலிஷ் போடச் சொல்றேன். ஏண்டா போடலைன்னா திமிராப் பேசறான்'' என்று வன்மம் தொனிக்கக் கூறினான் ராஜா.

''அப்படி என்னடா பேசிட்டான்? கிறிஸ்துமஸ் வருதில்லையா? அவனுக்கும் இரண்டு நாளா ஓய்வு ஒழிச்சல் இல்லாத வேலை. மறந்து விட்டிருப்பான். நீயே போட்டுக்கிறதுதானே? ராஜா! ஒருத்தனை மனுஷன் ஆக்குவதே பொறுமையும் அன்பும்தான். நம்மைப் போல அடுத்தவனையும் நேசிக்கணும். இனி மேல் இப்படியெல்லாம் நடக்கக் கூடாது என்ன?''

தாயார் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த ராஜா ஏதோ கூற வாயெடுத்தான். மறுவிநாடி என்ன நினைத்தானோ, முக பாவத்தை மாற்றிக் கொண்டு, ''சரியம்மா, சினிமாவுக்கு நேரமாயிடும், என்னோட ஃபிரண்ட்ஸ் எல்லாரும் காத்திட்டிருப்பாங்க'' என்றான்.

''தப்புத் தண்டாவுக்குப் போகாமல் ஒழுங்காச் சினிமா பார்த்துட்டு வந்துடணும்'' என்று அவனை அனுப்பி வைத்த அன்னை தன் பிள்ளையை நினைத்துப் பெருமூச்செறிந்தாள். சில நாட்களாகவே அவனிடம் காணப்பட்ட அலட்சியமும், கர்வமும், எதையும் பொருட்படுத்தாத போக்கும் அவளை வேதனைப் பட வைத்தன.

''ஐயா, சாமி! இரண்டு கண்ணும் தெரியாத குருடனய்யா, மனசு வைச்சுப் பிச்சை போடுங்கய்யா'' என்று பிளாட்பாரத்தின் ஓரமாகக் குரல் வரளக் கத்திக் கொண்டிருந்தான் ஒரு குருட்டுப் பிச்சைக்காரன்.

நண்பர்களோடு சென்று கொண்டிருந்த ராஜாவின் முகத்தில் ஒரு கேலிப் புன்னகை தோன்றியது. ''கேட்டீங்களாடா, இரண்டு கண்ணும் தெரியாதவன் குருடன்னு சொல்லித் தரான். ஏன்னா நமக்கெல்லாம் தெரியாது பாரு!'' நண்பர்கள் எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள்.

''இப்போ இரண்டு கண்ணும் தெரியாது. அந்தப் பக்கம் போனா எல்லாக் கண்ணும் தெரியும்'' என்றவாறே ஒரு ஐந்து காசு நாணயத்தை அலட்சியமாக விட்டெறிந்து விட்டு நடந்தான் ராஜா.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ''ராஜா ஃபாதர்கிட்ட போய் ஸ்தோத்திரம் சொல்லிட்டு வாயேன்'' என்று அனுப்பி வைத்தாள் ராஜாவின் தாய்.

சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான் அவன்.

பாதர் ஆரோக்கியசாமி மிகவும் நல்லவர். சிறுவர்களுடன் சிறுவராகவே பழகுவார். அவர் இனிக்க இனிக்கக் கதைகள் கூறி அறிவுரை சொல்வதை நாள் முழுக்கக் கேட்டுக் கொண்டே

இருக்கலாம். ராஜாவுக்கு அவரிடம் மிகுந்த மரியாதை.

''ஸ்தோத்திரம் ஃபாதர்'' என்று முழங்காலிட்டு நமஸ்கரித்து விட்டு எழுந்த ராஜாவுக்குக் கிறிஸ்துமஸ் புது வருட வாழ்த்துக்களைக் கூறிய பாதர் அவனை அமர வைத்து அறிவுரைகள் கூறலானார். ராஜாவின் அன்னை ஏற்கனவே அவனைப் பற்றி அவரிடம் கூறி வருந்தியிருந்தாள்.

பாதரிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பியபோது அவர் கூறியவை அனைத்தும் அவன் மனத்தை உறுத்திக் கொண்டேயிருந்தன. மழை வரும் போல் இருக்கவே சைக்கிளை வேகமாக மிதித்தான். திடீரென்று எதிரில் வந்த லாரியின் ஹாரன் ஒலி அவனைத் திடுக்கிட வைத்தது. லாரியில் மோதிவிடாமலிருக்கச் சைக்கிளைப் பக்கவாட்டில் திருப்பினான். சற்றும் எதிர்பாராது, பழக் கூடையோடு சாலை ஓரத்தில் வந்த கிழவியின் மீது சைக்கிள் மோதி அவளைக் கீழே தள்ளியது.

சாலையெங்கும் பழங்கள் சிதற, மூர்ச்சையாகிப் போனாள் கிழவி. இதற்குள் அவர்களைச் சுற்றி ஒரு கூட்டமே கூடிவிட்டது.

''இந்நேரம் கிழவியைக் கொன்னுடப் பார்த்தியே! ஏண்டா, பார்த்து வரத் தெரியாதா?''

''அவனை விடாதீங்க, பயலுகளுக்குச் சைக்கிள்லே ஏறிட்டா கண்ணுமண்ணு தெரியாது.''

ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கூறிக் கொண்டிருந்தனர். ஏற்கனவே பயத்தில் சுதி கலங்கிப் போய் நின்ற ராஜாவுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

கிழவியின் முகத்தில் யாரோ தண்ணீர் தெளித்தார்கள். நல்ல வேளை அடி ஒன்றும் பலமில்லை. அதிர்ச்சியால் ஏற்பட்ட மயக்கந்தான். முனகிக் கொண்டே எழுந்த கிழவி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''ஏம்பா, அந்தப் புள்ளையைப் போட்டு மெரட்டுறீங்க, பாவம் சின்னது. பயந்து போயி நிக்குது. வேணும்னு மோதியிருக்கும்? ஏதோ நடந்துட்டுது, விடுங்க'' என்றவாறு பழங்களைப் பொறுக்கத் தொடங்கினாள். கூட்டத்தினரும் உதவினர்.

ராஜாவுக்கு நெஞ்சை என்னவோ செய்தது. இந்தக் கிழவிக்குக்கூட பிறரிடத்து இத்தனை அன்பும், மன்னிக்கும் மனப் பாங்கும் இருக்கும்போது அவனுக்கு மட்டும்...?

அன்னையின் அறிவுரைகளும், ஃபாதரின் உபதேசங்களும் அவன் காதுகளில் ஒலி செய்தன. தன் செயலை நினைத்துத் தானே தலை குனிந்தான்.

கூட்டம் மெல்ல மெல்ல விலகியது.

''பாட்டி! அடி பலமாப்பட்டுட்டுதா?'' ராஜாவின் குரல் தழுதழுத்தது.

''இல்லேப்பா, எப்பவும் கவனமா இல்லாட்டி இப்படித்தான் வம்பு வந்து சேரும்'' என்றவாறு கிழவி நடையைக் கட்டினாள்.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ராஜா, தெளிந்த உள்ளத்தோடு வீடு வந்து சேர்ந்தான்.

''பீட்டர்! அன்னிக்குக் கோபத்தில் அப்படி முரட்டுத்தனமா நடந்துட்டேன். அதெல்லாம் மனசிலே வைச்சுக்காதே'' என்று ராஜா, பீட்டரிடம் கூறிய போது அவனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. மகனிடம் ஏற்பட்ட திடீர் மாறுதலைக் கண்ட ராஜாவின் அம்மாவுக்கும் மகிழ்ச்சியான மகிழ்ச்சி.



அவர்களின் அந்த வியப்பே அவன் இதயத்துக்கு எத்தனை இதமளித்தது?

வி.ர.வசந்தன்.

பூமி எதனால் ஆனது?



மனிதன் சந்திரனுக்கும் வேறு பல கிரகங்களுக்கும் செல்வதற்கு முயன்று வருகிறான். விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அவனுக்குத் தான் வாழும் பூமியைப் பற்றிய முழு விவரமும் இன்னும் தெரியாது.

பூமி என்பது என்ன? இந்த வினாவுக்கு உத்தேசமான பதிலைத்தான் தர முடியும். பூமி என்பது ஒரு பெரிய பந்து—கோளம். அநேகமாகப் பாறைகளாலானது அது. பூமியின் உள்ளே இந்தப் பாறை உருகிக் குழம்பாக உள்ளது. பூமியின் மேல் மூடி உறுதியான பாறை. பூமியின் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பாகத்துக்கும் குறைவான பகுதி நிலம், மிகுதி நீர்தான்.

மேலே கூறிய இந்த விளக்கத்தையே இன்னும் விஸ்தாரமாக்கிப் பார்க்கலாம். பூமியின் மேல் பாகமான ஓடு போன்ற பாறை, பத்திலிருந்து முப்பது மைல்கள் வரை கனமானது. இந்த ஓட்டுக்கு லித்தோஸ்ஃபியர் (*Lithosphere*) என்று பெயர். இந்த ஓட்டின் உயர்ந்த பாகங்களைக் கண்டங்கள் என்கிறோம். தாழ்ந்த பகுதிகளில் நீர் தேங்கி இருக்கிறது. இவைகளைக் கடல்கள், ஏரிகள் என்கிறோம். பூமியின் மேற் பரப்பில் உள்ள நீர் நிறைந்த பகுதிகளை — கடல், ஏரி, நதி மற்றும் சிறிய ஓடைகளை ஹைட்ரோஸ்ஃபியர் (*Hydrosphere*) என்கிறார்கள். மனிதனால் பூமியின் மேற்

மைக்கா என்றால் என்ன?



மைக்கா என்பது உண்மையில் ஒரு தாதுப் பொருள். மலைப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் பல்வேறு வகைப்பட்ட தாதுப் பொருள்களின் மொத்தக் குடும்பத்தையும் நாம் மைக்கா என்று அழைக்கிறோம். இதைப் பொதுவாக அப்பிரகம் என்று அழைப்பதுண்டு. கண்ணாடி போன்ற தோற்றமும் தகடு தகடுகளாக உரித்தெடுக்கக் கூடியதாகவுமிருக்கும் மைக்கா என்ற அபிரகம். மைக்கா தாதுக்கள் மஸ்கோவைட் (*Muscovite*) ஃப்லோகோபைட் (*Phlogopite*) பயெடைட் (*Biotite*) லெபிடோலைட் (*Lepidolite*) எனப்படுபவை. இவைகளை உச்சரிக்கவே சிரமமாக இருக்கிறதல்லவா? அதனால்தான் சுருக்கமாகவும், சுலபமாகவும் இவற்றை மைக்கா என்று அழைக்கிறார்கள். வேறுபட்ட உலோகங்களிலிருந்து இவை தோன்றினாலும் இந்தக் கனிஜங்களெல்லாமே பார்க்க ஒரே மாதிரியாக இருக்கும். எல்லா மைக்காக்களையுமே தகடு தகடுகளாகப் பிரிக்கலாம். இவை மிருதுவானவை. நகத்தினால் கீறி எடுத்து விடலாம். எல்லா மைக்காவும் ஒரே மாதிரியான ஸ்படிகங்களையே உண்டாக்கும். நிறமற்றதும், மஞ்சள், பச்சை, சிகப்பு, கறுப்பு, செம்பழுப்பு ஆகிய வண்ணங்களிலும் மைக்காத் தாதுக்கள் கிடைக்கின்றன. பூமியின் மேல் பரப்பில் உள்ள பல பாறைகளில் மைக்கா கிடைக்கிறது. எரிமலையின் குழம்பினால்

முதல் தேச படத்தைத் தயாரித்தவர் யார்?



தேசப் படம் என்பது என்ன? உங்கள் ஊரில் உள்ள முக்கியமான தெருக்களையும் இடங்களையும் எங்கெங்கு இருக்கின்றன என்பதை வார்த்தைகளால் விளக்குவது எவ்வளவு கடினம். இதையே ஒரு காகிதத்தில் வரை படமாகக் குறித்துக் காட்டுவது எவ்வளவு சுலபம்? இப்படி ஓர் இடத்தின் வர்ணனைகளைக் கொண்ட வரைபடம் தான் தேசப் படம் — (*Map*) எனப்படுகிறது.

இப்படிப்பட்ட முதல் வரை படத்தைத் தயாரித்தவர்கள் எகிப்தியர்கள். 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு வரை படம், களிமண்ணிலே குறிக்கப்பட்டு பிறகு அதைச் சுட்டு உறுதியாக்கி இருப்பது கிடைத்துள்ளது. பண்டைக் காலத்தில் நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்தின் பரப்பையும் இருப்பிடத்தையும் குறிப்பிடவும் மன்னர்கள் தங்கள் தேசத்தின் எல்லைகளை விளக்கவும் இத்தகைய வரை படங்களைப் பயன்படுத்தினார்கள். ஆனால் வெகு தூரத்தில் உள்ள இடங்களைக் குறிப்பிட்டு விளக்க வேண்டிய அவசியம் வந்தபோது குழப்ப மடைந்தார்கள். ஏனென்றால் பூமி உருண்டையாக இருப்பதனால் நெடுந்தூரங்களைக் கச்சிதமாகக் கணக்கிடுவது சிரமமாக இருந்தது. ஆரம்ப கால தேசப் படத் தயாரிப்பாளர்களுக்கு வானசாஸ்திரிகள் பெரும் உதவியாக இருந்தனர். பூமியின் தோற்றம், அமைப்பு ஆகியவைகளைப் பற்றி இவர்கள் ஆராய்ச்சி செய்தார்கள்.

எராடாதனிஸ் என்று ஒரு கிரேக்கர். கி. மு. 276ல் பிறந்தவரான இவர்

பரப்பில் உள்ள மலைகளை மட்டுமே ஆராய முடிகிறது. பூமியின் உள்ளே எப்படி இருக்கிறது, என்ன இருக்கிறது என்பதை ஆராய்வது கடினமான ஒன்று. சுரங்கங்களைத் தோண்டும் போதும், கிணறுகளைக் குடையும் போதும் ஆழம் போகப் போக அதிக உஷ்ணமாக இருப்பதை உணருகிறோம். பூமி மட்டத்துக்குக் கீழே இரண்டு மைல் போனால் அப்போது ஏற்படும் உஷ்ணத்தில் தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கிறது. விஞ்ஞானிகள் நில நடுக்கங்களை ஆராய்வதன் மூலம் பூமியின் உள் பகுதியைப் பற்றிய தகவல்களை அனுமானித்துக் கூறுகிறார்கள். பூமியின் நடுப் பகுதியின் உஷ்ண நிலை பத்தாயிரம் டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கும் அதிகமானது. பாறைகள் உருக 2200 டிகிரியே போதுமே! பூமியின் மேல் ஓடு இரண்டு அடுக்குகளால் ஆனது. மேல் பகுதிக்கு கிரானைட் (Granite) என்று பெயர். இந்த கிரானைட் யுன்ற அடுக்குக்கு அடியில் மிகக் கனமான, மிக உறுதியான பாறை உள்ளது. இதற்கு பாஸால்ட் (Basalt) என்று பெயர். பூமியின் நடுப் பகுதி நாலாயிரம் மைல்கள் விட்டமுள்ள உருகிய இரும்புக் குழம்பாலானதோர் பந்து. இந்த நடு மையத்துக்கும் மேல் மூடியான பாறைக்கும் இடைப்பட்ட இரண்டாயிரம் மைல்களை மாண்டில் (The Mantle) என்கிறார்கள். இந்த மாண்டில் என்ற பகுதி ஒலிவைன் (Olivine) என்ற வகைப் பாறையினால் உருவானது.

ஆன பாறைகள் இவை. சில வேளைகளில் வேறு தாதுப் பொருள்கள் மைக்காவாக மாறுவதும் உண்டு. இவ்வகை மாற்றத்தை, மெடமார்ஃபிஸம் (*Metamorphism*) என்பார்கள். அழுத்தம், உஷ்ணம், தண்ணீர் ஆகியவைகளால் ஏற்படும் மாற்றம் இவை.


அபிரகத்தைச் சுரங்கங்களில் வெட்டித்தான் எடுப்பார்கள். அப்பலேஷியன் மற்றும் ராக்கி மலைப் பிரதேசங்களிலும் கானடா, இந்தியா, மடகாஸ்கர், ரஷியா, பிரேஸில், தென் ஆப்பிரிக்கா இவை யெல்லாம் உலகில் மைக்கா கிடைக்கும் பிரதேசங்கள்.

வியாபார ரீதியில் மைக்கா தயாரிக்க, தேவையான கனத்துக்குத் தகடுகளாக உடைத்த பிறகு அளவுக்கு ஏற்ப வெட்டிக் கொள்ளுவார்கள். மைக்கா ஒரு சிறந்த இன்ஸுலேட்டர். அதாவது உஷ்ணம், மின்சாரம் இவை இதன் மூலம் பாயாது. கடத்தாப் பொருள். மின்சாரச் சாதனங்கள் தயாரிக்கவும் உஷ்ணம் உட்புகாத உபகரணங்கள் தயாரிக்கவும் மைக்கா எவ்வளவு முக்கியமானது என்பது புரிகிறதில்லையா? உங்கள் வீட்டில் உள்ள மின் சாதனங்களில் எவற்றிலெல்லாம் மைக்கா பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று பாருங்கள்.

கண்ணாடி பிரபலமாவதற்கு முன்னால் ஜன்னல்களுக்கு மைக்காத் தகடுகள் தான் கண்ணாடிகளாகப் பயன்படுத்தப்பட்டன என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கும்.

பூமியின் சுற்றளவைக் கிட்டத்தட்டச் சரியாகக் கணக்கிட்டுச் சொன்னார். இவருடைய முறையில் முதன் முதலில் உலகின் தெற்கு வடக்கு முனைகளின் தூரத்தைக் கணக்கிடுவது சுலபமாயிற்று. இதே காலத்தில் ஹிப்பார்சஸ் என்பவர் உலகின் குறுக்கிலும் நெடுக்கிலும் கற்பனையாகச் சில கோடுகளை — அட்ச ரேகை, தீர்க்க ரேகை என்கிறோமே இவைகளை — வரைந்தார். தாலமி என்பவர் இரண்டாம் நூற்றாண்டில் இதே முறையைக் கொண்டு இக் கற்பனைக் கோடுகளைத் தேசப் படத்தில் அமைப்பதில் வெகுவாக முன்னேறினார். பூகோள சாஸ்திரத்தைப் பற்றிய தாலமியின் புத்தகம் அமெரிக்காவைக் கண்டுபிடிக்கும்வரையும், ஏன், அதற்குப் பிறகும் கூட மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டது.

கொலம்பஸும் மற்றவர்களும் பல புதிய பகுதிகளைக் கண்டு பிடித்தது வரை படங்கள் தேசப் படங்கள் ஆகியவற்றில் மக்களுக்கு அதிக ஈடுபாட்டை உண்டாக்கிற்று. ஆண்ட்வர்ப்பைச் சேர்ந்த ஏப்ரஹாம் ஆர்ட்டிலியஸ் (*Abraham Ortelies*) என்பவர் தேசப் படங்களின் முதல் தொகுப்பை வெளியிட்டார். நவீன தேசப் படங்களின் தந்தை என்று ஜெராடஸ் மெர்க்காடர் (*Geradus Mercator*) என்பவரைத்தான் கூற வேண்டும். பூகோளத்தின் மீது உள்ள வளை கோடுகளை யெல்லாம் தேசப் படத்தில் நேர் கோடுகளாக வரைந்து தேச படத்தைத் தயாரித்தவர் இவர் தான். இது தேசப் படத்தில் உள்ள இரு இடங்களை நேர் கோட்டின் மூலம் காண்பதற்கு வசதியாக இருந்தது. மெர்க்கடாரின் தேசப் படப் புத்தகத்தின் மேல் அட்டையில் ஆட்லஸ் என்ற ராட்சத (*Giant*)னின் படம் போட்டிருந்தார். ஆகவே தேசப் படங்களின் தொகுப்பு • பிற்காலத்தில் ஆட்லஸ் என்றே பெயர் பெறலாயிற்று.



நாம் எப்படி? மற்றவர்கள் அப்படி!

தி. இரா. கிருஷ்ணன்

''இறங்க வேண்டிய இடத்தில் பஸ் வந்து நின்றதும் சங்கரும், சேகரும் அதிலிருந்து இறங்கினர்.

இறங்கிச் சிறிது தூரம்கூடச் சென்றிருக்க மாட்டார்கள். அதற்குள், சேகர், சங்கரிடம், ''சங்கர்! நாம ரெண்டு பேருக்கும் இன்னிக்கி ஓசியிலே பிரயாணம்'' என்று தன் செயலைப் பெருமையாகச் சொன்னான்.

ஒரு கணம் ஊமையாகிவிட்ட சங்கர், பிறகு, ''சேகர்! அதற்காகத்தானா எனக்கும் சேர்த்து நீயே டிக்கட் வாங்குவதாகச் சொன்னே? டிக்கட் வாங்காமல் பிரயாணம் செய்யறது தப்பில்லையா? உன்னை என் நண்பன் என்று சொல்லிக் கொள்கிறதுக்குக்கூட எனக்கு அவமானமாயிருக்கு'' என்றான்.

''என்னடா, ஒரேயடியாய் என்னென்னவோ பேசிட்டே போறே! பஸ்ஸில் கூட்டம் ஃபுல்லா இருந்தது. டிக்கெட் வாங்காம இருந்தா என்னன்னு தோணிச்சு. மேலும் கூட்டத்தில் யாருக்குத் தெரியும் நாம் டிக்கெட் வாங்கல்லே என்று?''

''நல்லாயிருக்குடா நீ சொல்றது!'' என்று கோபத்துடன் சொன்னான் சங்கர்.

''சங்கர்! உனக்கு உலகம் போகிற போக்கே சரியாகத் தெரியல்லே. இந்தக் காலத்திலே யார் யாரோ எப்படியெப்படியெல்லாமோ ஆயிரக்கணக்கிலே, லட்சக்கணக்கிலே ஏமாத்தறாங்க. ஏன் இன்னமும் ஏமாத்திக்கிட்டேயிருக்காங்க. அவங்களையெல்லாம் ஒன்றும் செய்ய முடியல்லே. கண்டு பிடிக்க முடியல்லே. அப்படிப் பிடித்தாலும் அது மிக சொற்பம்தான். நான் ஏமாத்தின எட்டணாவினாலே யாருக்கும் நஷ்டம் வந்துடப் போறதில்லே'' என்று தன் செயலுக்கு விளக்கம் தந்து கொண்டே வந்தான் சேகர்.

''சங்கர்! பஸ் நெரிசலில் உடம்பு இலேசா வலிக்குது. வா! இந்தக் கடையிலே ஒரு கப் காப்பி சாப்பிட்டு விட்டுக் கோயிலுக்குப் போகலாம்?''

''சார், இரண்டு காப்பி!'' என்றான் சேகர்.

''டோக்கன் வாங்கிட்டு வாங்கோ, சார்!'' என்றான் கிளாஸைக் கழுவியபடி ஒருவன்.

தயவுசெய்து டோக்கன் வாங்கிக் காப்பி சாப்பிடவும் என்ற போர்டுக்குப் பின்னாலிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார் அக்கடை முதலாளி.

டோக்கன் வாங்குவதற்காகப் பாண்டிலுள்ள பாக்கெட்டில் கையை விட்டான் சேகர். சில நிமிடங்களில் பாண்டிலிருந்த அனைத்துப் பைகளையும் துழாவ ஆரம்பித்தது அவன் கை.

பதறியபடி சங்கரிடம் வந்த சேகர், ''சங்கர்! என் பர்ஸைக் காணோம். யாரோ சண்டாளன் என் பர்ஸை அடிச்சுட்டானே. அதிலே ஐந்து ரூபாய் இருந்ததே?'' என்று பிதற்ற ஆரம்பித்தான்.

நிதானமாகக் கேட்டுக் கொண்டேயிருந்த சங்கர், ''ஏன் ரமேஷ்! உன்னையே நீ கண்டபடி திட்டிட்டு இருக்கே. வாய் வலிக்கப் போவுது'' என்று கிண்டல் செய்தான்.

''சங்கர்! இங்கே பர்ஸ் காணோமே என்று தவிச்சுக்கிட்டிருக்கேன். நீ என்னடா என்றால் வெந்த புண்ணிலே வேலை பாய்ச்சுறியே!'' என்றான் சேகர்.

'' ஏண்டா, சேகர்! கேவலம் ஐந்து ரூபாய்க்கா இவ்வளவு ஆத்திரப்படறே? பிக்பாக்கெட் அடிக்கிறது தப்பில்லே, அதனாலே யாருக்கும் நஷ்டம் வந்துடப் போறதில்லே, என்று உன்னைப் போலவே யாரோ ஒருவன் நினைச்சுட்டானோ என்னவோ?''

'' சங்கர்! நான் சொன்னதையே திரும்பச் சொல்லி என்னை அவமானப் படுத்தறியா? எந்தச் சண்டாளனோ எனக்குத் தெரியாமல் பிக்பாக்கெட் அடிச்சுப்புட்டான். அவன் நிச்சயம் உருப்படவே மாட்டான்.''

''சேகர்! இப்படியெல்லாம் சாபம் கொடுக்காதே. நீ எப்படி இந்தச் சாபமெல்லாம் பலிக்கணுமின்னு நினைக்கிறியோ அதே போல் உனக்குச் சாபம் கொடுத்தவங்களும் நினைச்சிருந்தா அப்புறம் நீ?'' கண்களில் நீர் ததும்பப் பேசினான் சங்கர். பிறகு அவனே தொடர்ந்தான்.

''சேகர்! நீ மத்தவங்களை ஏமாத்தின போது அது சிறு தொகை அதனாலே தப்பில்லே என்று வாதாடினே. இப்போ அதே சிறு தொகைக்காகக் கண் கலங்கி நிக்கிறே. மத்தவங்க நம்மகிட்டே எப்படி நடந்துக்கணுமின்னு நாம் விரும்புகிறோமோ அப்படித்தான் நாம மத்தவங்ககிட்டே நடந்துக்கணும்.''

'' சங்கர்! எனக்குப் புத்தி வந்துடுத்து. தனக்கு வந்தால்தான் தெரியும் என்று சொல்லுவாங்க. அது மாதிரி இப்போ எனக்கு நல்லா புரிஞ்சிடுச்சு. இனிமே அப்படியெல்லாம் செய்யவே மாட்டேன்'' என்று சங்கரைத் தழுவியபடி சொன்னான் சேகர்.

உங்கள் பிறந்தநாளுக்கு ஒரு பரிசு

(நடுப்பக்க விளம்பரத்துக்கு விளக்கம் இங்கே)

தனது ஐந்தாம் வயது பிறக்கும் தருணத்தில் கோகுலம் உங்களுக்கு ஒரு பரிசு வழங்கத் திட்டமிட்டுள்ளது. பரிசு என்றதும் ஏதோ போட்டியோ, கிட்டியோ என்று சிரமப்பட வேண்டாம். உங்கள் பிறந்த நாள் அதிர்ஷ்டமுள்ள நாளானால் இந்தப் பரிசு உங்களுக்குக் கிடைக்கும்.

கோகுலம் ஆசிரியர் ஓர் அதிர்ஷ்டத் தேதியைக் குறித்து அதைச் சீல்செய்த உறையிலிட்டுத் தமது பெட்டிக்குள் வைத்திருக்கிறார். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்:— **கோகுலத்தில் வெளியாகும் 'பிறந்த நாள் பரிசு' என்ற கூப்பனைப் பூர்த்தி செய்து உங்கள் பெற்றோர் அல்லது ஆசிரியரின் கையெழுத்துடன் எங்களுக்கு அனுப்ப வேண்டியது.** ஆசிரியர் குறித்து வைத்துள்ள தேதியில் யார் பிறந்திருக்கிறார்களோ அவர்களுக்கு **முதல் பரிசு ரூ. 100-ம்**, அந்தத் தேதிக்கு ஒரு நாள் முன் பிறந்திருப்பவர்களுக்கு **இரண்டாம் பரிசு ரூ. 50-ம்**. முதல் பரிசுத் தேதிக்கு அடுத்த நாள் பிறந்திருப்பவர்களுக்கு **மூன்றும் பரிசாக ரூ. 25-ம்** கிடைக்கும். பள்ளி திறந்ததும் புதிய வகுப்பில் சேர்ந்து புத்தகங்கள் வாங்கிக் கொள்ளுவதற்கு இப் பரிசுத் தொகை உங்களுக்கு வாய்ப்பாக இருக்கும் இல்லையா?

நாங்கள் குறித்து வைத்துள்ள அதிர்ஷ்டத் தேதியில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் பிறந்திருந்தால் பரிசுத் தொகைகள் பகிர்ந்து அளிக்கப்படும். **13-4-1960க்குப் பிறகு பிறந்திருக்கும் குழந்தைகள் மட்டுமே இப் போட்டியில் கலந்து கொள்ளத் தகுதி பெறுகிறார்கள். பிறந்த நாள் போட்டிக்கு 15-5-76ம் தேதிக்குள் உங்கள் கூப்பன்கள் எங்களுக்குக் கிடைத்துவிட வேண்டும்.** எங்கே உங்கள் பிறந்த தேதியைக் கூப்பன்களில் குறித்து அனுப்புங்கள் பார்க்கலாம். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் புகைப்படங்களும் கோகுலத்தில் இடம் பெறும். ஒரே குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால் அவர்கள் சௌகரியத்துக்காக இந்தக் 'கூப்பன்' 11-4-76, 25-4-76, 9-5-76 ஆக மூன்று 'கோகுலம்' இதழ்களில் வெளிவரும்.

இந்தத் திட்டம் பற்றி உங்கள் நண்பர்களிடமும்தான் சொல்லுங்களேன்!

— ஆசிரியர்

வளம் தரு வீதியிலே...

பெருக்குவோம் வசதிகளை கூட்டுவோம் வேகத்தை

இந்திய ரயில்வேக்கள் தினமும் 2,570 IIவது வகுப்பு தூங்கும் வசதி கொண்ட பெட்டிகளோடு 10,000 ரயில்களை விடுகின்றன. தற்பொழுது எங்கும் ரயில்கள் காலா காலத்தில் போய்ச் சேர்கின்றன. 'சரக்கு ரயில்களும் தினமும் 5.5 லட்சம் டன் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்கின்றன.

ரயில்வேக்களின் சேவை சிறப்படைய உதவவும். டிக்கெட் இல்லாப் பிரயாணத்தையும் ரயில் சாதனங்களின் திருட்டையும் தடுக்கவும்.



நெஞ்சில் உரமும்
செயலில் திறனும்
உறுதுணை நிற்கும்

davp 75/455

“ஏய், தொண்டி! கடைசியாச் சொல்றேன். இனிமே நீ எங்க விஷயத்திலே தலையிடாதே. நாங்க வாத்தியாருங்களைப் பத்திப் பேசறது, கிண்டல் பண்ணறது எல்லாத்தையும் அவங்ககிட்டே போய்ச் சொல்லற பழக்கத்தை இன்னியோட வுட்டுடு. இல்லே இன்னொரு காலையும் ‘பெண்டாக்’கிடுவோம்'' என்ற பாஸ்கருக்கு, ‘ஆமாம்’ என்று தலையை ஆட்டி ஒத்து ஊதினான் குமார்.

''பாஸ்கர்! நீயும் என் கூடப் படிக்கிற மாணவன்தான். நாம் எல்லோரும் சகோதரர்கள் மாதிரி. உங்களிடம் எனக்கு என்ன பகை? ஒன்றும் கிடையாது. அன்னை, தந்தை, ஆசான், தெய்வம் என்னும் நான்



மன்னிப்பு

கல்யாணி

கும் முதலாகும் என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். தெய்வத்துக்குச் சமமான நம் ஆசிரியர்களை நீங்கள் — குடுமி வைத்த ஆசிரியரை ‘வால்பீலைக்’, பொடி போடும் ஆசிரியரை, ‘மூக்குறிஞ்சி’, குட்டையானவரைக் ‘குள்ளக் கத்திரிக்காய்’ — இப்படியெல்லாம் அழைப்பதை நான் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா? பாஸ்கர், நான் முடமாக இருப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், உங்கள் உள்ளத்து உணர்வுகள் முடமாகிக் கிடக்கின்றனவே — அதை நினைத்துத் தான் வேதனைப்படுகிறேன்!'' என்றான் இரத்தினம்.

''அப்பப்பா! என்ன பேச்சு? என்ன அழகான தத்துவங்கள்! பெரிய இவரு. எங்களுக்குப் புத்திமதி சொல்கிறார். ஒழுங்கா எங்கள் விஷயத்திலே தலையிடுகிறதை விட்டுடு. இல்லேன்னா நடக்கிறதைப் பாரு...'' பாஸ்கரும், குமாரும் இப்படிச் சொல்லி விட்டுத் தங்கள் வீட்டை நோக்கி விரைந்தார்கள்.

இரத்தினமும் தன்னுடைய வீடு நோக்கி ஊர்ந்தான்.

இரத்தினத்தின் பெயர் மட்டும் இரத்தினமில்லை. அவனுடைய குண நலன்களும் இரத்தினமானவைதாம். வகுப்பில் எப்போதும், படிப்பில் அவன்தான் முதல்வனாக இருப்பான். பேச்சுப் போட்டியோ, கட்டுரைப் போட்டியோ எதிலும் அவனுக்குத்தான் முதல் பரிசு. ஆனால் விளையாட்டில் மட்டும் அவன் எந்தப் பரிசும் வாங்கிவிட முடியாதபடி அவனுடைய கால்களில் ஒன்று பிறவியிலேயே ஊனமாகி யிருந்தது.

கடவுள் எந்த மனிதரையும் நிறையானவனாகப் படைப்பதில்லை. எவ்வளவு திறமை பெற்ற மனிதரிடையேயும் சில குறைகளை வைத்துவிடுகிறான் — திருஷ்டி பரிகாரமாக. இரத்தினமும் அவர்களில் ஒருவன் என்று சொன்னால் மிகையாகாது.

பாஸ்கர், அவ்வூர்ப் பெரிய மனிதர் ஒருவரின் மகன். அவனுடைய தந்தை நல்லவர்தான். ஆனால், செல்வச் செழிப்பும், ஒரே பையன் என்ற செல்லமும் பாஸ்கரைத் தீயவனாக்கி யிருந்தன. தாயார் ஒன்றும் சொல்வதில்லை. தந்தை ஏகாம்பரத்தின் சொல்லை அவன் கேட்பதில்லை. தமக்கு இருப்பதோ ஒரே பையன். அவனைக் கண்டிக்கப் போக ஏதாவது விபரீதமாகச் செய்து கொண்டு விட்டால் என்ன செய்வதென இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தார் ஏகாம்பரம்.

அன்று பள்ளிவிட்டு வந்தவுடன் பாஸ்கர் அவன் அப்பாவிடம் போனான்.

வெள்ளையர் ஆட்சியில் ஆந்திரப் பிரதேசத்தில் பின்தங்கிய மாவட்டங்களாகக் (BACKward) கருதப்பட்ட (B) பெல்லாரி, (A) அனந்தபூர், (C) கடப்பை, (K) கர்நூல் ஆகிய ஜில்லாக்களின் முதல் எழுத்துக்களின் கோவை அவற்றின் தலையெழுத்தான BACK என்பதற்குப் பொருத்தமாய் அமைந்துள்ளதைப் பாருங்கள்.
— கலாபாரதி

''அப்பா! நான் இனிமேல் பள்ளிக்கூடமே போகப் போவதில்லை'' என்று அவன் கண்களைக் கசக்கிக் கண்ணீரை வரவழைத்தான். ''ஏன் பாஸ்கர், என்ன நடந்தது?'' என்று பதற்றத்துடன், கேட்டார் அவன் அப்பா. ''எங்கள் பள்ளியில் இரத்தினம் என்று ஒரு பையன் இருக்கிறானப்பா. அவன், நான் ஆசிரியர்களைப் பற்றி அதைச் சொன்னேன், இதைச் சொன்னேன் என்று பொய்யாக எல்லா ஆசிரியர்களிடமும் சொல்லி வைத்திருக்கிறான். எல்லோரும் என்னைத் திட்டி அடித்து, அவமானப்படுத்தி விட்டார்கள்.'' பாஸ்கர் அழுதான். ''பாஸ்கர், அழாதே. நான் நாளை வந்து உன் வகுப்பாசிரியரிடம் கேட்கிறேன்'' என்று ஏகாம்பரம் அவனைச் சமாதானப் படுத்தினார்.

அடுத்த நாள் பாஸ்கருடன், அவன் தந்தை ஏகாம்பரமும் பள்ளிக்கு வந்தார். வகுப்பாசிரியரிடம் இது பற்றிக் கேட்டார். ஆசிரியர் இரத்தினத்தையும், இன்னும் சில மாணவர்களையும் அழைத்து வரச் செய்து நடந்தவற்றைச் சொல்லச் சொன்னார். அந்த மாணவர்களும் உண்மையை அப்படியே சொன்னார்கள். பாஸ்கருக்குக் கோபமும், அழுகையும் பீறிட்டன. ஆனால், என்ன செய்ய முடியும் ?

''அத்தனையும் பொய். குமாரை வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள்'' என்றான் பாஸ்கர். குமார் வந்தான். ஆசிரியருக்கு முன்னால் பொய் சொல்ல முடியவில்லை. பாஸ்கருக்கு ஆதரவாகப் பேசவும் முடியவில்லை. ''சார்... வந்து'' என்று மழுப்பினான். தன் மகன் மீது தான் தவறு இருக்கிறது என்று உணர்ந்து கொண்ட ஏகாம்பரம், ஆசிரியரிடம் வருத்தம் தெரிவித்து விட்டு வெளியேறினார். பாஸ்கர், தான் பலர் முன்பாக அவமானப்பட்டுவிட்டதால் மேலும் கோபம் அடைந்தான். இரத்தினத்தைப் பார்க்கும்பொழுது எல்லாம் அவனைச் சுட்டு எரிப்பதுபோல் நோக்கினான். அன்று மாலை பள்ளி விட்டபின் வீட்டுக்கு நடந்தபோது, இரத்தினத்தின் காதில் படும்படியாகக் குமாரிடம், ''குமார்! அந்த நொண்டிப் பயலுக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும் ? நாளைக்கு ஏர்க்காட்டில் ஃப்ளவர் ஷோ பார்க்கப் போகிறேன். வருவதற்கு மூன்று நாட்களாவது ஆகும். வந்த பிறகு அவனை என்ன செய்கிறேன், பார்!'' என்றான் பாஸ்கர்.

நான்கைந்து நாட்கள் சென்றன.

இரத்தினம், அவ்வூரிலிருந்து அரசினர் மருத்துவ மனைக்குச் சில ஆப்பிள் பழங்களுடன் சென்று கொண்டிருந்தான். பாஸ்கர் தன் குடும்பத்தாருடன் பிளஷரில் ஏர்க்காட்டிலிருந்து மலைப் பாதையில் திரும்பி வந்துகொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டுவிட்டதாம். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த பாஸ்கரைப் பார்ப்பதற்காகத் தான் இரத்தினம் போகிறான்.

''வா, இரத்தினம்!'' என்று வரவேற்ற பாஸ்கரின் கண்கள் கலங்கின. ''இரத்தினம்! உன்னை நொண்டி நொண்டி என்று பழித்தேன். இன்று என் நிலைமையைப் பார்த்தாயா?'' என்று கூறிப் பாஸ்கர் தன் மீதிருந்த பெட்ஷீட்டை அகற்றினான்.

''பாஸ்கர், என்ன இது ? உன்னுடைய கால்?''

''ஆமாம், இரத்தினம். வலது கால் எலும்புகள் காரின் அடியில் சிக்கி நொறுங்கிப் போய்விட்டன. முழங்காலுக்குக் கீழே வெட்டி எடுத்தால் தான் உயிர் பிழைக்க முடியும் என்று டாக்டர் சொல்லிவிட்டார். அன்று ஒரு நாள் நீ என்னையும் குமாரையும் பார்த்துச் சொன்னாய் — எங்களுடைய உள்ளத்து உணர்வுகள் முடமாகியிருப்பதாக. உள்ள உணர்வுகள் இன்று சீர்ப்பட்டுவிட்டன. ஆனால், என் கால் முடமாகிவிட்டதே! என்னுடைய தவறுகளையெல்லாம் மன்னிக்காமல் கடவுள் இவ்வளவு பெரிய தண்டனையைக் கொடுத்துவிட்டார். நீயாவது என்னை மன்னித்துவிடு இரத்தினம்!'' பாஸ்கரின் கண்கள் நீரைச் சொரிந்தன.

''கடவுள் உன்னை மன்னிக்கவில்லை என்று சொல்லாதே ! உன் கால்களில் ஒன்றை மட்டும் முடமாக்கி, உன்னை உயிர் பிழைக்க வைத்ததே அவர் அளித்த மன்னிப்புதான் என்று எண்ணி மனத்தைத் தேற்றிக் கொள், பாஸ்கர்!'' என்ற இரத்தினம் பாஸ்கரின் கண்களில் வழிந்த நீரைத் துடைத்து விட்டான் ஆறுதலாக.



மறைவிடத்திலிருந்து நாக வர்மன் வீசிய விஷம் தோய்ந்த ஈட்டி விஜயனின் உடலில் ஊடுருவிப் பாய்ந்தது. நேருக்கு நேர் நின்று போரிட்டு வெற்றி காண முடியாத அந்த வீரனை வஞ்சனையால் வீழ்த்திவிட்டான் கொடியவன். வேல் பாய்ந்த வேதனையைவிடத் தன்னை ஒளிந்திருந்து தாக்கிய கொடுமையை எண்ணிக் குமைந்து போனான் விஜயன். குப்புற விழுந்து கிடந்தான். குத்து வாயிலிருந்து குருதி கொப்பளித்துப் பூமியைச் சிவப்பாக்கிக் கொண்டிருந்தது. வேல் பாய்ந்து விஜயன் விழுந்த உடனேயே மறைவிடத்திலிருந்து ஓடோடி வந்தான் நாகன். தான் இட்டமிட்டபடி எல்லாம் வெற்றியாக நடந்து விட்டதில் அவனுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி.

விஜயனுக்கு இன்னும் நினைவிருந்தது. உயிர் பிரியவில்லை. ஈட்டியின் விஷம் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கிக்கொண்டிருந்தது. விஜயனால் பேச முடியவில்லை. உடலை அசைக்கவும் முடியவில்லை. பார்வை மங்கிக் கொண்டு வந்தது. கொடிய விஷத்தின் குணம் போலும் அது. விழுந்து கிடந்த விஜயனின் அருகே ஓடி வந்த நாகன் கைகளைத்

8

தேய்த்துக் கொண்டு அந்த மாவீரனின் உடலைச் சுற்றிச் சுற்றி வந்தான். வீழ்த்திய இரையை விழுங்கும் வெறியோடு சுற்றிச் சுற்றி வரும் ஓநாயைப் போல. ஓநாய்க் குணம் படைத்த நாகனின் கண்களில் பயங்கரமான ஒரு வெறி ஓர் ஒளி வீசிக் கொண்டிருந்தது. விஜயனின் உடலிலே பதிந்து நின்ற ஈட்டியைப் பிடுங்கி எடுத்தான். ஊற்றாக ரத்தம் பீறிட்டு அவன் முகத்தை நனைத்தது. அதனால் அந்த வெறியனின் முகம் இன்னும் விகாரமாக, கோரமாகக் காட்சி யளித்தது. ஆனால் அவனோ இதனால் கொஞ்சமும் கலங்கவில்லை. வெற்றிச் சிரிப்புடன் அந்த வீணன் தன் சாகஸங்களை வாய் விட்டு உரக்கவே சொல்லிக் களிப்படைந்தான். ''திட்டமிட்டபடி எல்லாமே நிறைவேறி விட்டது. நான் தயாரித்த மந்திர பானம் இவன் நினைவை யெல்லாம் அழித்துப் புதிய மனிதனுக்கியது. தன் கடந்த கால நிகழ்ச்சிகளை, காதலை எல்லாம் மறந்த நிலையில் புவனாவைப் புதியவளாக எண்ணினான். தன் காதலியையே மற்றவனுக்கு மனைவியாக்கி வைத்தான். .... ஹ... ஹா... ஹா!'' என்று வெறிச் சிரிப்புடன் விஜயாவின் உடலைப் புரட்டினான் நாக வர்மன். அவன் கையிலிருந்த மந்திர மோதிரத்தைக் கழற்ற முயன்றான். ஆனால் முடியவில்லை. இழுத்தான், திருகினான். அது பெயரவில்லை. ஆனால் அதனால் நாகன் இடிந்து போய்விடவில்லை. 'உன்னையே மாய்த்து விட்டவனுக்கு உன் விரலை வெட்டி இதை எனதாக்கிக் கொள்ள முடியாதா என்ன?' என்று குரூரமாக நகைத்தான்.

''இத்தனையையும் எதற்காகச் செய்தேன்? இந்த மாய மோதிரத்தை என் உடைமையாக்கிக் கொண்டு இவ்வுலகையே ஆளவேண்டும் என்பதற்காகத் தானே? உன்னைக் கொல்வதற்கு உன் காதலி புவனாவின் அனுமதியையும் ஆணையாக அவள் வாயிலிருந்தே பெற்றேனே! நீ வீராதி வீரனாக இருக்கலாம். வெற்றி கொள்ள முடியாத பலம் பொருந்தியவனாக இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட உன்னையும் வீழ்த்தி வெற்றி கொள்ளத் தந்திரசாலி நாகனால் முடியும். எப்படி என் வல்லமை?... ஹ.... ஹா.... ஹா...! இந்த மாய மோதிரத்தை என் வசமாக்கிக் கொள்ளப் போகும் நானே வீரன், நானே தீரன்!'' என்று வெறியனைப் போல் பயங்கரமாகச் சிரித்தான் நாகவர்மன்.



அதே சமயம் அவன் பின்னால் வந்து நின்ற குதிரைகளைக் கவனிக்கவில்லை. சுற்றுச் சூழலைக் கவனிக்கும் நிலையிலும் அவன் இல்லை. சித்த ஸ்வாதீனமிழந்தவனைப் போலத் தனக்குத் தானே வாய் விட்டுப் பலமாகத் தன் பிரதாபங்களைக் கூறிக் கொக்கரித்துக் கொண்டிருந்ததைக் குதிரை மீதிருந்தவர்கள் ஒரு வார்த்தை விடாமல் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் முகத்தில் அப்போது ஏற்பட்ட பயங்கரமான மாறுதலை விவரிக்க எழுத்தினால் முடியாது. அப்படிக் குதிரை மீது அமர்ந்தபடி நாகவர்மனைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் யார்? மன்மத வர்மர், புவனா, மற்றும் குபேரபுரி அமைச்சர்களும், பிரபுக்களும். அவர்கள் எப்படி அங்கு வந்தார்கள்?

நாகனுக்குத் தான் அளித்த பதிலினால், ஒப்புதலினால் — நிம்மதி இழந்து போயிருந்தாள் புவனா. அரசரின் விருப்பப்படி வேட்டைக்கு வர விரும்பாவிட்டாலும், தான் நாகனுக்கு அளித்த அனுமதி விபரீதமாகி விடாமல் பார்த்துக்கொள்ளவாவது வேட்டைக்குப் போகத் தீர்மானித்தாள். கூடாரத்துக்கு வந்தது முதல் அவள் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது. வேட்டையாடுபவர்கள் நாகனின் திட்டப்படி பல திசைகளிலும் பிரிந்து சென்றது அவள் சந்தேகத்தையும், தவிப்பையும் அதிகமாக்கியது. அவளால் கூடாரத்தில் அமைதியாக இருக்க முடியவில்லை. விஜயனின் உயிருக்கு ஏதோ ஆபத்து. அதுவும் தன்னால்தான் என்ற நினைப்பு அவளைப் புழுவாகக் குடையலாயிற்று. மன்னர் மன்மத வர்மரைத் தேடிப் போனாள். மிக அருகிலேதான் அவர் இருந்தார். தன் வருங்கால மனைவி தன்னைத் தேடி வந்ததில் மகிழ்ச்சி யடைந்த மன்மதர், புவனாவின் எந்த விருப்பத்தையும் நிறைவேற்றச் சித்தமாக இருந்தார். உடனே விஜயன் இருக்கும் இடம் போக வேண்டும் என்று அவள் கூறவே மன்னரும் மற்றையோரும் விஜயன் வேட்டைக்குச் சென்ற திசையில் அவனைத் தேடிக் கொண்டு கிளம்பினார்கள். தான் முடித்துவிட்ட விபரீதத்தைக் காட்ட விதி அவர்களைச் சரியான வழியில் நடத்



றிக் கொண்டு போயிற்று. வெறியனைப் போலத் தன் பிரதாபங்களைக் கூறிக் குதூகலித்துக் கொண்டிருந்த நாகனின் வார்த்தைகளைச் செவிமடுத்தபடி சிலையாகி நின்றார்கள் அத்தனை பேரும்; சற்றுத் தொலைவில்.

தன் காதலனின் நினைவை அழித்துத் தனக்கு அநீதி இழைத்து இப்போது இவ்வுலகை விட்டே அவனை ஒழித்த கொடுமையை எண்ணிக் குமுறியபடி குதிரை மீதிருந்து குதித்து ஓடினாள் புவனா. குருதி வடிந்து உயிர் ஒடுங்கிக் கொண்டிருக்கும் விஜயனின் தலையை எடுத்துத் தன் மடி மீது கிடத்திக் கொண்டாள். விஷமாகிப் போன ரத்தமெல்லாம் வெளியேறிவிட்ட நிலையில் நாகனின் விஷ பானத்தின் வீர்யம் செத்து விட்டிருந்தது. விஜயனுக்குப் பழைய நினைவும் பளிச்சிட்டது. ஆனால்... ஆனால்...!

புவனாவினால் பேச முடியவில்லை. தேம்பி அழவும்கூட முடியாத உணர்ச்சி வசப்பட்ட நிலை. ''இப்போது எனக்கு எல்லாமே புரிகிறது. என்னை யாரோ ஒரு வேற்று மனுஷியாக, பார்த்தே இராத ஒரு பெண்ணிடம் பழகுவது போலப் பேசினீர்களே அதன் காரணம் இப்போது புரிகிறது. ஐயோ! உங்கள் அறிவை, நினைவை மறக்கடித்து மாயம் செய்து விட்டார்களே, அதை அறியாமல் நானும் தங்களிடம் கோபம் கொண்டு, இந்த முடிவுக்குத் தங்களைக் கொண்டு வந்து விட்டேனே!'' என்று விம்மினாள்; புலம்பினாள்.

அணையும் சுடராக இருந்தான் விஜயன். மூடியிருந்த அவன் விழிகள் மெல்லத் திறந்தன. இறுகியிருந்த உதடுகள் மெல்ல மலர்ந்தன. துவண்டு கிடந்த கரங்கள் மெல்ல உயர்ந்தன. 'புவனா, என் அன்பே!' என்றது விஜயனின் இதழ்கள். தாங்க முடியாத துயரத்துடன் 'ஹோ' என்று கதறினாள் கந்தருவக்கன்னி. விஜயனின் கரங்கள் அவள் கண்ணீரைத் துடைத்து விட்டுத் துவண்டு விழுந்தன. இமைகள் மூடிக் கொண்டன நிரந்தரமாக. தலை ஒரு பக்கமாகச் சாய்ந்தது தரையில். தன் கணவனாக வரித்து விட்ட விஜயனின் மார்பிலே விழுந்து கதறி அழுதாள் புவனா.

திடீரென்று தோன்றிய மன்னரையும் மற்றோரையும் கண்டதும் நாகன் விதிர் விதிர்த்துப் போனான். அவன் வெறிச் சிரிப்பு சட்டென்று நின்றது. மன்னரையும் புவனாவையும் மந்திரிகளையும் மிரள மிரள மாறி மாறிப் பார்த்து விழித்தான். என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினான். ஓடிவிட நினைத்தாலும் கால்கள் செயல்பட மறுத்தன. ''நான்... நான்... கொல்லவில்லை.... விஜயனை நான் கொல்லவில்லை!'' என்று குழறினான். மன்னர் மன்மத வர்மர் பேசவே இல்லை. அருகிருந்த தளபதியைப் பார்த்தார். அடுத்த விநாடி இரண்டு வீரர்களின் இரும்புப் பிடியில் சிறைப்படுத்தப் பட்டான் நாகவர்மன்.



புவனாவின் துக்கம், வேதனை வடியட்டும் என்று அவளை அழவிட்டு அமைதியாக இருந்தார் மன்னர் மன்மத வர்மர். என்ன நடந்திருக்கும் எப்படி நடந்திருக்கும் என்பதை ஒருவாறு ஊகித்துக் கொண்டு விட்ட அவருக்கு இப்போது புவனாவின் மீது பரிவும் கனிவும் ஏற்பட்டன. ஒப்பற்ற ஒரு வீரனின் வாழ்வையும் ஓர் அழகியின் உள்ளத்தையும் தன் தம்பி எப்படிப் பாழாக்கிவிட்டான் என்பதை எண்ணி நெஞ்சம் புண்ணானார்.

''என் அன்பே! உங்களுக்கும் எனக்கும் இந்த நிலையை உண்டாக்கியது இந்த மோதிரம்தான். மாயத் தங்கத்தின் சாபம்தான். இத்தனைக்கும் காரணம்'' என்று விஜயனின் கைகளை எடுத்துத் தன் முகத்தை மூடிக் கொண்டு புலம்பும் புவனாவை மன்மத வர்மர் மெள்ளத் தூக்கி நிறுத்தினார். இனியும் அவளை அழவிட்டுக் கொண்டிருக்க விரும்பாமல்.

''புவனா! உன் நிலை எப்படிப்பட்டதென்று எனக்குத் தெரிகிறது. ஆறுதலடைய முடியாதுதான். உன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்த என் தம்பி தக்கபடி தண்டிக்கப்படுவான். இனி அழுவதினால் ஆகப் போவது ஏதுமில்லை. வஞ்சனையால் வாழ்வு பறிக்கப்பட்ட இந்த மாவீரனுக்கு நாம் முதலில் உரிய முறையில் இறுதி மரியாதையைச் செலுத்துவோம். எழுந்து என்னுடன் வா. இனி நீ என் சகோதரி'' என்று ஆதரவாக அழைத்துப் போனார்.

குதூகலமாக வந்த வேட்டை கோஷ்டியில் சோகம் கப்பியது. மாவீரனுக்கு உகந்த முறையில் விஜயனின் உடலை ஒரு பெரிய கேடயத்தில் கிடத்தி அதை நான்கு வீரர்கள் சுமந்து வந்தார்கள். சுவர்ணா நதிக் கரையிலேயே சந்தனக் கட்டைகளை அடுக்கி மேடை அமைத்து அதன் மீது விஜயனின் உடலைக் கிடத்தினார்கள். வரிசையாகக் கையில் பந்தமேந்தி வந்து வீரர்கள் ஒவ்வொருவராக விஜயனின் சிதைக்குத் தீயிட்டார்கள். எவ்வகைப் போராட்டத்திலும் யாராலும் வெல்ல முடியாத வீரனை விஜயனின் உடலைத் தீ சூழ்ந்து கொண்டு திகுதிகு வென்று எரிக்கலாயிற்று. சிதையைச் சூழ்ந்து மன்னரும் மற்றையோரும் வீரர்களும் நின்றிருந்தார்கள். எல்லோருடைய கண்களிலிருந்தும் அருவியென நீர் பெருகிக் கொண்டிருந்தது. அப்போது புவனா திடீரென்று 'நீலவேணி!' என்று கூவினாள். சற்றுத் தொலைவில் தொங்கிய தலையுடன் நின்று கொண்டிருந்த அந்த அற்புதக் குதிரை புவனாவின் குரலைக் கேட்டதும் உடலைச் சிலிர்த்துக் கொண்டது. கம்பீரமாகக் கனைத்தபடி அவள் அருகே வந்து நின்றது. குபீரென்று அதன் முதுகில் தாவி ஏறி அமர்ந்தாள் புவனா. ''என் அன்பே! வீர விஜயா! இதோ உங்களுடன் நானும் வருகிறேன்'' என்று கூறியபடி நீலவேணியின் விலாவிலே தன் கால்களால் தட்டி ஊக்கினாள். குபீரென்று தன் முன்னங் கால்கள் இரண்

டையும் தூக்கியபடி முன்னே பாய்ந்த அந்த அற்புதக் குதிரை விண்ணைத் தொட்டபடி எரிந்து கொண்டிருந்த பெருந் தீயினுள் புகுந்தது. இத்தனை யும் கண் இமைக்கும் நேரத்தில் நிகழ்ந்து விட்டதினால் யாரும் ஏதும் செய்ய இயலவில்லை. அத்தனை பேரும் திக்பிரமை பிடித்துப் போய் நின்று கொண்டிருந்தார்கள்.

அதை அடுத்து இன்னொரு அற்புத மும் நிகழ்ந்தது. விஜயனின் சிதை யினுள் தன் குதிரையோடு புகுந்த புவனா அந்தத் தீம்பிழம்போடு உருகிக் கலந்து போனாள். சற்றைக்கெல்லாம், ஸ்வர்ணா நதியிலே தி டீ ரென் று பேரலைகள் கடலைப் போல் எழுந்தன. 'ஹோ' என்ற பயங்கரமான ஓசை யுடன் உருண்டு கருண்டு எழுந்த வெண் அலைகளுக்கு மேலாக நதிக் கன்னிகள் மூன்று பேரும் காணப் பட்டார்கள். பொங்கிப் பெருகிய ஆற்று நீர் அலை, அதன் கரையில் திகுதிகுக்க எரிந்து கொண்டிருந்த விஜயனின் சிதையை மூடிச் சுருட்டி இழுத்துக்கொண்டு போயிற்று. சிதையோடு விஜயனின் உடல், புவனாவின் உடல் எல்லாமே ஸ்வர்ணா நதியின் வயிற்றுக்குள் போய்ச் சேர்ந்தன.

அலையோடு அலையாக மூழ்கியும், மேலே எழும்பியும் தோன்றிக்கொண் டிருந்தனர் நதிக் கன்னிகள். ஒருத்தி தன் கைகளை உயர்த்திக் காட்டினாள். அதிலே விஜயனின் விரலிலிருந்து நாக னால் கழற்ற முடியாத மாய மோதிரம் தகதகத்துக் கொண்டிருந்தது.

அதைக் கண்ட நாகன், வீரர்களின் பிடிக்குள் அடங்கிக் கிடந்த அவன், வெறியனைப் போல் வீரர்களை உதறிக் கொண்டு ஓடினான் பொங்கிப் புரளும் நதிப் பிரவாகத்தை நோக்கி. "அது என்னுடையது, என்னைச் சேர வேண் டியது. கொடுத்துவிடு!" என்று கூறிய படி நதிக் கன்னியின் கைகளிலிருந்து அதைப் பறிக்கப் பாய்ந்தான். அதே சமயம் ஸ்வர்ணா நதியின் காவல் கன்னி களான மற்ற இரு பெண்களும் நாக னின் கால்களைப் பற்றி இழுத்துக் கொண்டு நதிக்குள்ளே போனார்கள். மாயத் தங்கம் அதன் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தது. அதைத் தனதாக் கிக்கொள்ள முயன்ற கடைசி மனிதனான நாகனும் அதோடு சமாதியாக்கப் பட்டான். ஏதுமே நிகழாதது போல் ஸ்வர்ணா நதி அமைதியாக ஓடிக்கொண் டிருந்தது.

முற்றும்

தெரியுமா ?



2252. நோபல் பரிசு பெற்ற டாக்டர் ஹரிகோவிந்த கொரானா என்பவர் எந்த நாட்டுப் பிரஜை ?

2253. எந்த நாடு தன்னுடைய சாட்டலைட்டுக்கு 'ஸ்கைநெட்' என்று பெயர் சூட்டியிருக்கிறது?

2254. மல்லஸ்க் (Mollusc) என்றால் என்ன ?

2255. தியோடோலைட் (Theodolite) என்ற கருவியை ஒருவர் உபயோகிப்பாரானால் அவர் புரியும் தொழில் எதுவாக இருக்கும் ?

2256. எலிப்பொறி (The Mouse Trap) என்ற நாடகம் லண்டனில் மிகப் பிரபலமாக ஆண்டுக்கணக்கில் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு நாடகம். இதை எழுதியது யார் ?

2257. கில்லட் கப் என்பது ஒரு பரிசு. இதைப் பெற இங்கிலாந்தில் எந்த விளையாட்டை விளையாடுவார்கள், தெரியுமா ?

2258. யுனெஸ்கோ (UNESCO) என்ற வார்த்தை எதைக் குறிக்கிறதென்று விளக்க முடியுமா ?

2259. ஜெஸ்ஸி ஓவன்ஸ் (Jesse Owens) என்பவர் 1936 ஒலிம்பிக்கில் நான்கு தங்கப் பதக்கங்களைத் தட்டிக் கொண்டு மிக்க பரபரப்பை உண்டாக்கியவர். இவர் எந்த நாட்டவர் தெரியுமா?

2260. இங்கிலாந்தில் கடைசியாக டோரிக் கட்சி ஆட்சி நடத்தியபோது பிரதமராக இருந்தவர் யார் ?

2261. ஆண்டன் வான் லூவென் ஹாக் (Anton Van Leuwanhock) என்ற பெயர் எந்த விஞ்ஞானக் கருவியை உங்களுக்கு நினைவுபடுத்துகிறது ?

2262. ஈஸ்டர் தீவு எந்தக் கடலில் இருக்கிறது தெரியுமா ?

2263. டர்கிஷ் கெக்கோ (Turkish Gecko) என்பது என்ன ?

2264. கிறிஸ்தபர் லாதாம் ஷோல்ஸ் என்பவர் கண்டுபிடித்தது — 'நீராவி இஸ்திரிப் பெட்டியை—தையல் யந்திரத்தை — டைப்ரைட்டிங்மெஷினை— இதில் எது சரி ?

2265. ஜோசிப் ப்ராஸ் — என்ற பெயர் யாருடையது என்று உங்களுக்குத் தெரியாது. இது ஒரு நாட்டின் புகழ்பெற்ற தலைவருடையது. இவர் யார் தெரியுமா ?

2266. ட்ஸெட்ஸி ஈ (Tsetse Fly) என்பது என்ன ?

2267. நேபாளத்தின் தலைநகரம் எது?

2268. வட அமெரிக்காவின் எந்த மாகாணத்தில் புகழ்பெற்ற மியாமி இருக்கிறது ?

2269. பியானோ வாத்தியத்தை முதன் முதலில் கண்டுபிடித்தது யார்?

2270. சாலமனின் மரணத்துக்குப் பிறகு ஹீப்ருக்களின் தேசம் இரு சாம்ராஜ்யங்களாகப் பிரிந்தன. அவை எந்தப் பெயரில் அழைக்கப்பட்டன தெரியுமா ?

2271. உலகிலேயே மிகப் பெரிய மீன் எது ?

2272. எதியோப்பியாவின் மன்னரை 1974ம் ஆண்டின் ஆரம்பத்தில் பதவி இறக்கம் செய்தார்கள். இவர் பெயர் என்ன தெரியுமா ?

தெரியுமே !




2252. பாரதத்தில் பிறந்தவரானாலும் அவர் ஓர் அமெரிக்கப் பிரஜை. 2253. ரஷ்யா. 2254. மிருதுவான உடலும் கெட்டியான ஓடுகளும் உடைய உயிரினங்களுக்கு இப்பெயர். 2255. சர்வே செய்பவராக இருப்பார். 2256. அகதா கிறிஸ்டி. 2257. கிரிக்கெட் ஆட்டத்தை. 2258. முடியுமே - United Nations Educational Scientific and Cultural Organisation என்பதன் சுருக்கமே அது. 2259. ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்தவர். 2260. எட்வர்டு ஹீத். 2261. சூட்சம தரிசினி (மைக்ராஸ்கோப்)யை. 2262. பசிபிக் கடலில். 2263. ஒருவகைப் பல்லி. 2264. டைப்ரைட்டிங் மெஷினை. 2265. மார்ஷல் டிட்டோவின் உண்மைப் பெயர் இது. பதினெட்டாவது வயதில் அரசியல் காரணங்களுக்காகக் கைதியாகாமல் தப்ப இந்தப் பெயரை வைத்துக்கொண்டார். 2266. மாட்டு ஈ போன்றதொரு ஈக்கு இப்பெயர். இவ்வகை ஈக்கள் கால்நடைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து அழிவைத் தர வல்லவை. 2267. காட்மாண்டு. 2268. ப்ளோரிடோ மாகாணத்தில். 2269. பிளாரன்ஸ் நகரில் வாழ்ந்த பார்த்த லோமியோ கிறிஸ்தஃபோரி என்பவர் 1709ம் ஆண்டில் உருவாக்கினார். 2270. ஜுதா, இஸ்ரேல் என்று. 2271. திமிங்கிலச் சுறுமீன். (The Whale Shark). 2272. ஹெய்லி செலாஸி.

கோகுலத்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்.

REGISTERED No. M 9040

GOKULAM Childrens Fortnightly
மலேசியாவில் (விமானப் பதிப்பு) 50 மலேயா காசு



C-5 T